Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இணைந்து விட்டீர்களா?

நிலவு .com in

யாழ் Online

275, யாழ். வீதி,
மானிப்பாய்.

T.P.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 14 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 16 (29.11.2004) திங்கட்கிழமை இதழ்:60

## அமெரிக்காவில் எழுச்சிபூர்வமாக தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள்!



(நியூயோர்க்)
தமிழீழ மாவீரர் நாள் நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் எழுச்சி பூர்வமாக. இடம்பெற்றது.



அமெரிக்க மற்றும் தமிழீழ தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு, அகவணக்கத்துடன் இந்த மாவீரர் தின நிகழ்வு ஆரம்பமானது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்ரேலியாவின் சிட்னியில் நேற்று மாவீரர் நாள் நிகழ்வுகள்!

(சிட்னி)

அவுஸ்ரேலியா நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தின் சிட்னி மாநகரத்தில் மாவீரர் நாள் நிகழ்வு நேற்று மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

தமிழீழ தேசியக் கொடியேற்றல், அகவணக்கம், ஈகச்சுடரேற்றல், மாவீரர் மலர் வணக்கம் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அவுஸ்ரேலிய பரப்புரைப் பொறுப்பாளர் சபேசன், தமிழகத்திலிருந்து வருகை தந்த பிரபல ஓவியர் புகழேந்தி ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' (The War and Peace) என்ற நூலை அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் லாறி பேர்கஸ்ஸன் வெளியிட்டு வைத்தார்.

சிறப்பம்சமாக தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரை அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது.

சிறுவர்களின் நாட்டிய நாடகங்கள், பாடல்கள் ஆகியவற்றுடன் மேலும் பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் ஆயிரக் கணக்கில் இந்த மாவீரர் நாள் நிகழ்வில் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

### பிரபாகரனின் எச்சரிக்கையை அடுத்து

# தென்னிலங்கை அரசியல் கட்சிகள் இரகசியமாகக் கூடி ஆராய்ந்தன!

## அரசாங்கம் – ஜே.வி.பி. இன்று தனித்தனியே அறிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான கருத்துத் தொடர்பாகவும் – இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் காலதாமதமற்ற பேச்சுக்குத் தயாரா என்றும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் விடுத்த அழைப்புக் குறித்துத் தென்னிலங்கை அரசி

போரா? சமாதானமா? என்பதை அரசாங்கம்தான் தீர்மானிக்க வேண்டும் என்றும் – பொறுமைக்கான எல்லைக் கோட்டைத் தொட்டுவிட்டதாகவும் பிரபாகரன் எச்சரித்திருப்பதால் –

அடுத்த கட்டமாக என்ன செய்வது என்பது குறித்து தென்னிலங்கை முக்கிய அரசியல் கட்சிகள் இரகசிய

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான கருத்துத் தொடர்பாகவும் – இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் காலதாமதமற்ற பேச்சுக்குத் தயாரா என்றும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் விடுத்த அழைப்புக் குறித்துத் தென்னிலங்கை அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

போரா? சமாதானமா? என்பதை அரசாங்கம்தான் தீர்மானிக்க வேண்டும் என்றும் – பொறுமைக்கான எல்லைக் கோட்டைத் தொட்டுவிட்டதாகவும் பிரபாகரன் எச்சரித்திருப்பதால் –

அடுத்த கட்டமாக என்ன செய்வது என்பது குறித்து தென்னிலங்கை முக்கிய அரசியல் கட்சிகள் இரகசிய ஆலோசனைகளில் ஈடுபட்டதாகத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் உரை தொடர்பாக

# அஸ்கிரிய பீடாதிபதியுடன் ஐ.தே.க. ஆலோசனை!

(கொழும்பு)

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை தொடர்பாக - ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் கட்சித் தலைவர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் அஸ்கிரிய பீடாதிபதி வண. புத்தர கித்தர தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினர்.



லண்டன் மாவீரர் தின நிகழ்வில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரை ☞ 2 ஆம் பக்கத்தில்.

நேற்றுக்காலை கண்டி தலதா மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது இதன்போது நாட்டின் அரசியல் நிலைவரம் குறித்தும் - தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையில தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கை மற்றும் சமாதான முயற்சிகள் இழுத்தடிப்புக்களால் மீண்டும் போருக்குத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு விடயங்களுக்கு ஆதரவளிக்க ஈரானிய அமைச்சர் சந்திரிகாவுக்கு உறுதி!



(தெஹ்ரான்)

பாதுகாப்பு ஒத்துழைப்பு ரீதியில் இலங்கைக்குத் தொடர்ந்தும் ஆதரவை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக ஈரானிய பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் ஷம்கானி ஜனாதிபதி சந்திரிகாவிடம் உறுதியளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானுக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா - தெஹ்ரானிலுள்ள பூஸ்ரான் மாளிகையில் ஈரானியப் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் ஷம்கானி மற்றும் ஈரானின் ஆசிய மற்றும் ஒஷியானியா பிராந்தியங்களுக்கான பிரதி வெளிவிவகார அமைச்சர் மொஷேன் அமீன்வுடே ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்களின்போது - இருதரப்புக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்புக் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதன்போதே தொடர்ந்தும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ரீதியான ஆதரவை ஈரான் வழங்கத் தயாராக இருப்பதாக ஈரானிய பாதுகாப்பு அமைச்சர் ,

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223881, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

Your friend in the skies...

# தலைவர் பிரபாகரன் போருக்குத் தயார்; சந்திரிகாதான் தீர்மானிக்கவேண்டும்...!

**லண்டன் - எக்ஸெல் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய சிறப்புரை முழுமையாகத் தரப்படுகிறது.**



எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த எமது அருமைப் போராளிகளை நினைவுகூரும் புனித நாளிலே - எனக்கு உங்கள் மத்தியில் இந்த உரையை நிகழ்த்த வாய்ப்புக் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தலைவர் பிரபாகரன் இன்று ஒரு முக்கியமான செய்தியை அறிவித்திருக்கிறார். மிகவும் பாரதூரமான செய்தி. அதாவது சந்திரிகா அம்மையாருக்கு ஒரு எச்சரிக்கை விடுத்து - அதாவது இனி தொடர்ந்தும் இந்த இழுபறி தொடரமுடியாது,

பொறுத்தது போதும், இனி நாங்கள் போராட்டத்துக்குத் தயாராக இருக்கிறோம் என எச்சரித்து ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறார்.

இப்பொழுதெல்லாம் சிங்கள தேசத்தில் எல்லாரும் நடுங்கிக் கொண்டிருக்கினம். எமது விடுதலைப் புலிகள் இயக்கம் பலவீனமடைந்து விட்டது. இயக்கத்துக்குள் உள் முரண்பாடு தலைதூக்கிவிட்டது, புலிகள் குட்டக் குட்டக் குனிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்தவர்களுக்கு தலைவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அதாவது நாங்கள் கேட்டதுபோல் இடைக்கால நிர்வாகத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் பேசுவதற்கு இறுதிச் சந்தர்ப்பம் என்று எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்.

இதைத் தவறவிட்டு - எமது அவசர கோரிக்கையை நிராகரித்து மேலும் இழுத்தடிப்பு நடந்தால், நாங்கள் எமது தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பிப்போம் என உறுதிபடச் சொல்லியிருக்கிறார்.

இப்ப நான் இங்க வரேக்க ஒருவர் கேட்டார் - என்ன பாலாண்ணை தலைவற்றை அறிக்கையைப் பார்க்க அடிபாடு துவங்கப் போகுது போல எண்டு. "அப்ப நான் கேட்டன் அது எங்கட தொழில்தானே, செய்யத்தானே வேணு மெண்டு."

நான் சமீபத்தில் கொழும்புக்குப் போயிருந்தேன். அங்கிருந்து வன்னிக்குச் சென்று தலைவரைச் சந்தித்தற்காகக் கொழும்புக்குப் போயிருந்த சமயம், ஒரு விடயத்தை அவதானிக்க முடிந்தது.

அதாவது - அங்க முந்தி நாங்கள் கொழும்புக்குப் போய் இறங்கினால் அங்க நல்ல வரவேற்பு இருக்கும்.

ராஜமரியாதை இருக்கும், எங்களுக்கென்று உபசரிப்புகள் இருக்கும். ஆனால், இந்தமுறை அப்படி ஒன்றுமில்லை. முக்கியமான வி.ஐ.பிமார் தங்கிற இடத்திலகூட எங்களைக் கொண்டு போய் விடேல்ல. எங்களைக் கொண்டுபோய் ஒரு தனி அறைக்குள்ள இருத்திவிட்டினம்.

அங்கு ஒரு மணித்தியாலம் குந்திக்கொண்டிருக்கச் செய்தினம். அப்பொழுது நோர்வேத் தூதுவர் என்னோட இருந்தார். அப்போது எனக்கு சிறுநீர் கடுப்பாக வந்தது. அப்பநான் நோர்வேத் தூதுவரிட்டைக் கேட்டன் -

ஐயா எனக்கு சிறுநீர் கழிக்க அனுமதி வாங்கித் தாறியளோ என்று கேட்டேன்.

ஒரு மணித்தியாலம் வைச்சு இழுத்தடிச்சுப்போட்டு, ஒரு ஹெலிகொப்டரிட்டைக் கொண்டு போச்சினம். அது போர்த்துக்கீசர் காலத்துக் ஹெலிகொப்டர். இரும்புக்கு விலைபேசி விக்கிறதுக்காக வைச்சிருக்கினம்.

அப்ப சாந்தனும் என்னோட வந்தவர். நான் கேட்டனான், அவரிட்ட இதில நம்பி ஏறலாமோ டாண்டு. அந்தக் ஹெலிகொப்டர் நிலத்திலயிருந்து எழும்பவே அரை மணித்தியாலம் செண்டுது. விக்கி விக்கிச் சேடம் இழுத்துக்கொண்டு தான் போய்ச் சேர்ந்தது.

அப்ப நான் தலைவருக்குச் சொன்னனான் இனிமேல் இந்த ஹெலியில வரமாட்டன். வேணுமெண்டால் மாட்டு வண்டியில வாறமெண்டு.

நான் வழமையாகத் தலைவர் பேசுற - வழங்குகிற உரைக்கு ஒரு விளக்கம் கொடுக்கிறது வழக்கம். இந்த முறையும் அதையே செய்யப் போகிறேன். ஏனென்று சொன்னால் இதில முக்கியமான செய்திகளை அவர் சொல்லியிருக்கிறார்.

முக்கியமான அறிவிப்புக்களை அவர் தெரிவித்திருக்கிறார். இப்ப அவர் என்ன சொன்னார், என்ன நோக்கத்தோடு சொன்னார், என்ன் செய்ய உத்தேசித்துள்ளார் என்பவற்றை நான் இப்பொழுது உங்களுக்கு எடுத்து விளக்க இருக்கிறேன்.

இது தலைவரின் அதிமுக்கியமான கொள்கைப் பிரகடனம். அவர் தனது உரையில் தெரிவித்த சில முக்கியமான அம்சங்களை ஒவ்வொன்றாக எடுத்து விளக்கவிருக்கிறன்.

முதலாவது சொல்கிறார் -நாங்கள் ஒரு - அதாவது எமது மக்கள் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகிறார்கள் எண்டு. அதாவது போருமில்லை, நிலையான சமாதானமும் இல்லை, இயல்புநிலை இல்லை, இடைக்காலத் தீர்வுமில்லை, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வும் இல்லை.

இப்படியான ஒரு வெறுமை - சூனியம் தொடர்ந்துகொண்டு போகமுடியாது. ஒண்டில் பேச வேணும். ஒண்டில் சண்டைபிடிக்க வேணும். அதுவுமில்லை, இதுவுமில்லை - இரண்டும் கெட்டான் நிலை.

ஆனால், தென்னிலங்கையில் நிலைமை நல்லபடியாக நடந்து கொண்டிருக்க அங்கு மக்கள் சந்தோஷமாக வாழுகினம். ஆனால், எங்கட மக்கள் அகதி முகாமுக்குள்ள தொடர்ந்து அவலப்பட்டுக் கொண்டிருக்கினம்.

அப்ப, அங்க போராளியள் மத்தியிலையும் ஒரு கேள்விக்குறி. இது எப்பிடி இந்த நிலை தொடர்ந்து போறதெண்டு. நான் இரண்டு வாரத்துக்குமுன் தலைவரிட்டைப் போய் நீண்டநேரமா அவரோட கதைச்சனான்.

அப்ப அவர் சொன்னார் - பாலாண்ணை இப்பிடிப் போகேலாது. அது போராட்டத்தை மழுங்கடித்து கடைசியாப் போராட்டமே இல்லாமல் போயிடும்.

இங்க நாங்கள் சரியான பலத்தோட இருக்கிறம். எங்கள அசைக்க முடியாது. ஒரு சில சின்ன சலசலப்புகள் ஏற்பட்டு இப்ப எல்லாம் அமைதியாக இருக்கு. நிலைமைகள் எல்லாம் முழுக் கட்டுப்பாட்டுக்குள்ள இருக்கு.

நாங்கள் பலமாக, எதுக்கும் தயாராக இருக்கிறம். ஆகவே இந்த முறை நாங்கள் இப்படித் தொடர முடியாது எண்டு சொன்னார். எனக்கு மாத்திரமில்லை. நான் அங்க வன்னியில நிக்கும்போது நோர்வே வெளிவிவகார மந்திரியும் வந்திருந்தார். அவருக்கும் அதைத்தான் சொன்னார்.

இப்படி இழுபட்டுக்கொண்டு போக நாங்கள் ஒருநாளும் அனுமதிக்க முடியாது. இப்ப உங்களுக்குத் தெரியும். இந்த எமது விடுதலை இயக்கம் போர்நிறுத்தம் செய்து மூன்று வருடங்கள் ஆகின்றது.

அதாவது 30 ஆண்டுகாலப் போர்புரிந்து - கிட்டத்தட்ட 18 ஆயிரம் போராளிகளைப் பலிகொடுத்து ஒரு பெரிய யுத்தம் நடத்தினோம். கடந்த 3 வருடங்களாக அமைதி காத்து வருகிறோம். இப்ப என்னெண்டு சொன்னால், இந்த உலக நாடுகளின்ர அழுத்தம்.

உலக நாடுகள் கேட்டினம் - என்னெண்டு சொன்னால் நாங்கள் நிறையக் காசு தாறம் போரால அழிபட்ட தேசத்தைக் கட்டியெழுப்புங்கோ, அகதிகளாக - இடம் பெயர்ந்து அவதிப்படுற உங்களுடைய மக்களுக்கு உதவி செய்ய நாம் பெருந்தொகையான காசு தாறம். பேசுங்கோ என்று.

சரியெண்டு சொல்லிப்போட்டுத்தான் பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தைக்குத் தலைமை தாங்கி நான்தான் போனனான். ஆறு மாதமாக நடந்தது - உலகத்தின் பல தலைநகர்களில் பேச்சு.

நானும் இந்த வருத்தத்தோட இழுபட்டுக்கொண்டு ஜப்பான், தாய்லாந்து என்றுபோய் பேசினன். ரணில் விக்கிரமசிங்கவோட பேசினம், ஆனால் அவரிட்டை ஒரு அரசியல் அதிகாரமும் இல்லை.

அரசியல் நிர்வாகம் முழுக்க அம்மாவிட்டை. சும்மாபோய் நாங்கள் மேசையில போயிருந்து கதைச்சுப்போட்டு, ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒவ்வொரு உபகுழுக்கள் போட்டம்.

அதாவது யுத்த நெருக்கடியைத் தணிச்சு இயல்புநிலை உருவாகிறதுக்கு ஒரு கமிட்டி.

மற்றது புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்துக்கு இன்னொரு உபகுழு, ஆறு மாதமாகப் பேசி இந்த உபகுழுக்களைப் போட்டம். ஆனால், இந்த உபகுழுக்கள் ஒண்டும் செம்மையாகச் செயற்படவில்லை.

செம்மையாகச் செயற்படாமல் படிப்படியாகச் செத்துப்போச்சுது. அப்ப தலைவர் என்னைக் கூப்பிட்டார். என்ன பாலாண்ணை, போனீங்கள், பேசினீங்கள் உபகுழுக்களைப் போடுறீங்கள் இந்த உபகுழுக்கள் உருப்படியா செயற்படுதுமில்லை. எங்கட மக்கள் தொடர்ந்து அல்லல் பட்டுக்கொண்டிருக்கினம். அவையளுக்கு ஒரு நிதியொதுக்கீடுகளும் இல்லை.

என்னவோ 4.5 மில்லியன் டொலர் என்று சொல்லுறாங்கள் இங்க ஒரு பத்துரூபாகூட வருகுதில்லை. உதென்ன விளையாட்டு என்று.

அப்ப அவர் சொன்னார் - இந்தப் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தம் செய்வம். பேச்சுவார்த்தையை முறிக்கிறேல்ல. பேச்சுவார்த்தையை இடைநிறுத்தம் செய்துபோட்டு இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கேப்பம். இந்த இடைக்கால நிர்வாகத்தை அமைத்து இந்த உலக நாடுகள் வழங்குகின்ற நிதியை எடுத்து எங்கட மக்களுக்கு முதலில உதவி செய்யுங்கோ.

உருப்படியாக எமது மக்களுக்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாண உதவி செய்யுங்கோ எண்டு இறுக்கிப் பிடிப்பம் எண்டு சொன்னார். அதன்படி பேச்சுவார்த்தையை இடைநிறுத்தினம்.

பேச்சுவார்த்தையை நிறுத்திப் போட்டு, ரணில் ஐயாட்டைக் கேட்டம் ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒண்டைப் போடுவம். நீங்கள் அதற்கான யோசனையைச் சொல்லுங்கோ எண்டு.

அப்ப ரணில் ஐயா என்ன செய்தாரெண்டால், மாறி மாறி மூன்று இடைக்கால வரைபுகளைத் தந்தார். அதில பார்த்தால் ஒருவிதமான உருப்படியான அதிகாரமும் இல்லை.

அதைப் பார்த்துக்கொண்டு நாங்கள் ஒண்டும் செய்யேலாது. அப்ப நாங்கள் எல்லாத்தையும் நிராகரித்துப்போட்டம். அப்ப தலைவர் சொன்னார் - தொடர்ந்து நாங்கள் எல்லாத்தையும் நிராகரித்துக் கொண்டிருந்தால் உலகம் நினைக்கும் இவர்கள் வேணுமெண்டுதான் செய்கிறார்கள் எண்டு.

ஆகவே நாங்கள் ஒண்டைத் தயாரித்துக் கொடுப்பம் என்றார். அதற்கப்புறம்தான் உலகத்திலுள்ள - வெளிநாடுகளிலுள்ள எங்கட அரசியல் அறிஞர்கள், சட்ட வல்லுநர்கள் மற்ற அரசியலமைப்பு நிபுணர்கள் எண்டு எல்லாரையும் கூப்பிட்டு அவையளோட கலந்தாலோசித்து ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தைத் தயாரிச்சம்.

இதைத் தயாரிச்சு போன வருடம் நவம்பர் முதலாம் திகதி ரணிலுக்கு குடுத்தம். ரணில் என்ன செய்தார். இது கொஞ்சம் வித்தியாசமாத்தான் இருக்குதெண்டாலும் இதை அடிப்படையாக வைச்சுப் பேசுவம் என்று சொன்னார்.

ஆனால், நாங்கள் இந்த இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை ரணிலுக்குக் குடுத்து, நாலாவது நாள் சந்திரிகா அம்மையார் திடீரென முக்கியமான மூன்று அமைச்சுகளை ரணில் அரசாங்கத்திட்டையிருந்து பறிச்செடுத்திட்டார்.

அதில முக்கியமான அமைச்சுக்கள் பாதுகாப்பும், உள்துறை அமைச்சும். அதை எடுத்தவுடன் அந்த அரசாங்கம் ஆட்டம் கண்டு போச்சு, அதில்லாமல் அரசாங்கத்தில வேலையில்லை.

அப்படியிருக்கப் பேந்தென்ன செய்யுறாவெண்டால், நாடாளுமன்றத்தைக் கலைச்சு, தேர்தலை வைச்சு ஒருமாதிரி ரணிலின்ரை அரசாங்கம் கவிழ்ந்தது.

ரணிலின்ரை அரசாங்கம் கவிண்டதுக்குக் காரணம் என்னவென்று ஆராய்ஞ்சு பார்த்தால், புலிகள் இடைக்கால நிர்வாகசபை கேட்கினம்.

இதை ஏற்கமுடியாது. புலிகள் வடக்கிலையும், கிழக்கிலையும் நிர்வாக அதிகாரம் கேட்கினம். இதைக்கொடுக்க முடியாது. சந்திரிகா அம்மையார் ரணில் அரசாங்கத்தை இதன் காரணமாத்தான் கலைச்சார்.

தேர்தல் நடந்து தெற்கிலையும் தமிழீழத்திலையும் பெரியதொரு மாற்றம் நடந்தது. தெற்கில - முதற்தடவையாக சிங்கள பேரினவாத சக்திகளை - சிங்கள மக்கள் தான் வாக்களித்து உருவாக்கிவிட்டினம்.

அதாவது தமிழ் விரோதக் கட்சியான ஜே.வி.பி. கிட்டத்தட்ட 40 ஆசனங்களோட தெரிவு செய்யப்பட்டுது. இனவாதப் புத்தபிக்குகளின்ரை கட்சி - ஹெல உறுமய 10 புத்தபிக்குகளை நியமித்து விட்டுது.

தென்னிலங்கையில் பாக்கப் போனால் இதுவரைகாலமும் இல்லாதமாதிரி சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்படுகினம்.

அம்மா இவையள் எல்லாரையும் கூட்டுச்சேர்த்து ஒரு கட்சி அமைக்கிறார். சரி இந்தத் தேர்தல்லை என்ன நடந்ததெண்டால் - சிங்களப் பேரினவாத - தமிழ்விரோத சக்திகள் தென்னிலங்கையில் ஆட்சிக்கு வந்திருக்கினம்.

சும்மா பகிடியில்லை. இந்த சக்தியெல்லாம் நேற்றும், முந்த நாளும் கொழும்பிலை புலிகளுக்கெதிராக - நோர்வே அரசுக்கெதிராக- சமாதானத்துக்கெதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்தினம்.

இந்த அரசாங்கத்தின்ரை - அம்மாவின்ரை மடியிலை இருந்து கொண்டுதான் இதைச் செய்யினம். சரி தமிழீழத்திலை என்ன நடந்தது. தமிழீழத்திலை நீண்ட காலத்துக்குப் பிறகு முதன் முதலாக, விடுதலைப்புலிகளின்ரை கொள்கைக்கு ஆதரவாக ஒன்றுபட்ட சக்தியாக தமிழ்த் தேசியம் உருப்பெறுகிறது.

புலிகளுக்கு மக்களின்ரை அமோக வாக்களிப்பு கிடைக்குது. அதாவது புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து 22 எம்.பிமாரை தமிழ்மக்கள் தேர்ந்து விடுகினம்.

இப்ப தென்னிலங்கையில் சிங்கள இனவாதம் தலைதூக்க, தமிழீழத்திலை தமிழ்த் தேசியவாதம் தலைதூக்கிச்சுது. அதைத்தான் தலைவர் சொல்லுறார் தனது அறிக்கையில், அதைத் திருப்பி வாசியுங்கோ.

இந்தத் தேர்தலில் சிங்கள, தமிழ்த் தேசிய இனங்கள் இரண்டும் வேறுபட்ட தேசங்களாக உருப்பெற்றது. நாங்கள் செய்யவில்லை. எங்கட மக்களும் சிங்கள மக்களுமாகச் சேர்ந்து - நாங்கள் இரண்டு பேரும் வெவ்வேறு தேசங்கள் எண்டதைக் காட்டிப் போட்டினம். அது மக்களின்ரை தீர்ப்பு.

ஏற்கனவே இலங்கைத் தீவு ரெண்டாகப் பிளந்திட்டுது. இந்தத் தேர்தலிலை இதுதான் நடந்தது.

தமிழர் தாயகத்தில நடந்த தேர்தல்ல புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாசபைக்கு எமது மக்களின்ர முழு அங்கீகாரமும், மவுசும் கிடைச்சிருக்கு.

இது லேசான திட்டமல்ல. மக்களால் மதிக்கப்பெற்ற ஒரு இடைக்காலத் திட்டம்.

இப்ப தென்னிலங்கையில சிங்களப் பேரினவாத சக்திகள் ஆட்சிக்கு வந்திருக்கு.

சந்திரிகா அம்மையார் ஆட்சிப் பீடத்தில இருக்கிறார் - ஜனாதிபதியாகவும் நாடாளுமன்றத்தையும் வைச்சுக்கொண்டு. அப்படியிருந்தும்கூட நாங்கள் சமாதான முயற்சியைக் கைவிடேல்ல.

எங்கடை இடைக்காலத் தீர்வுத் திட்டத்தின்ரை அடிப்படையில் பேசுவம் எண்டு அம்மாட்டை நாங்கள் கேட்டம்.

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

# இலங்கைத் தமிழர்களுக்காக தொடர்ந்து குரல்கொடுப்பேன்

## ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ



(கொழும்பு)

சொந்த நாட்டில் அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பேன் என, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு வைகோ தொடர்ந்து பேசுகையில் -

செய்யாத குற்றத்துக்காக 19 மாதம் சிறையில் இருந்தேன். அப்போது என்னை வெளியே கொண்டு வாருங்கள் என்று யாருடைய தயவையும் நாடவில்லை. ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் திருமங்கலம் கூட்டத்தில் பேசியது உண்மை தான். ம.தி.மு.க தமிழகத் தமிழர் நலனில் மட்டுமல்லாது, உலகெங்குமுள்ள தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளது.

இலங்கையில் தற்பொழுதுள்ள சந்திரிகா அரசு - தமிழர் பிரச்சினையில் நல்ல தீர்வைக் கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. ரணில் விக்கிரமசிங்க தீர்வுக்கு முயற்சித்தார். ஆனால், சந்திரிகா மிகத் தந்திரமாக அமைச்சரவையைக் கலைத்து, அமைச்சர் பதவிகளைப் பறித்தார். பெருமளவு ஆயுதங்களை பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளிலிருந்து வாங்கிக் குவித்தார். எந்த நேரத்திலும் மீண்டும் அவர் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடும். ஈழத்தில் அமைதி பிறக்கட்டும். அங்குள்ள தமிழர்கள் நிம்மதியாக வாழட்டும். இது தமிழக மக்களின் விருப்பம். சொந்த நாட்டில் அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்களுக்காக நான் தொடர்ந்து குரல் கொடுப்பேன். அதில் தவறேதுமில்லை. இலங்கையில் மீண்டும் போர் மூண்டு, அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுவிடக்கூடாது என்பது தான் என் கவலை.

திருமங்கலத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நான் பேசியது என்ன என்பதை, என் மீதான பொடா வழக்கு முடிந்ததும் துண்டுப் பிரசுரங்களாக அச்சிட்டுப் பொது மக்களுக்கு விநியோகிப்பேன்.

முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு - தமிழகத்தில் நியாயமாக நடக்காது என, வழக்கைக் கர்நாடகத்துக்கு மாற்ற உத்தவிட்டிருக்கிறது மேல்நீதிமன்றம். தமிழகத்தில் எங்கே நீதியிருக்கிறது? எனவே, ஜெயலலிதா தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு, வழக்கைச் சந்திக்கவேண்டும் என வைகோ கூறினார்.

# எமது தேசியத் தலைவர் சமாதானத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றார்

## மட்டு.அம்பாறை தளபதி ராம்

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட 25 வருட கால யுத்தத்தின் பின்பு எமது மக்களுக்கு ஒரு ஓய்வு கிடைத்து இருக்கின்றது. இந்த ஓய்வான கால கட்டத்தில் எமது தேசிய தலைவர் சமாதானத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றார். இருந்தபோதும் எமது மக்களிடையே பொருளாதாரப் பிரச்சினை தொடர்கின்றது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் கரடியனாற்றில் நடைபெற்ற கிராமிய அபிவிருத்தி வங்கி கட்டடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய மட்டு. அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ராம் தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து கூறுகையில் -

பொருளாதார ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் எமது சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கு கருணா செயற்பட்டு வருகின்றார். இது ஒரு சதித்திட்டமாகும். இந்தக் கருணாவையும் அவருடைய சகாக்களை பின்னணியாக வைத்துக் கொண்டு சந்திரிகா யுத்தத்தை தொடர்வதற்குரிய வழிகளைக் மேற்கொண்டு இருக்கின்றார். எமது விடுதலைப் போராளிகள் மீது இந்த சமாதான காலகட்டடத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கருணாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு பல தாக்குதல்களை நடாத்தி இருக்கின்றனர்.

இவற்றையெல்லாம் எமது தலைவர் பொறுமையுடன் இருந்து சமாதானத்துக்கான வெற்றிப் பாதையை கைவிடாது செயற்பட்டு வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நீதிபதி கொலை சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்!

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலையோடு தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 7 பேர், இன்று கொழும்பு புதுக்கடை நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலை தொடர்பாகத் தற்போது நடைபெற்றுவரும் பொலிஸ் விசாரணைகள் பற்றி, ஊடகங்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக நேற்று முன்தினம் பொலிஸ்மா அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கொலையோடு தொடர்புடைய இன்னும் சிலரைக் கைது செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும், இது குறித்து விசாரணைகளுக்குத் தடங்கல்கள் ஏற்படும் எனக் கருதுவதால் இது குறித்து விபரங்களை வெளியிடமுடியாது.

சரத் அம்பேபிட்டியவின் கொலைக்குப் பின்னால் பிரதி அமைச்சர் ஒருவர், ரத்தினகல பிரதேச அரசியல்வாதி ஒருவர் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலரும் தொடர்புபட்டிருப்பதாக, தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. பொலிஸ் விசாரணைகளில் இவை உறுதி செய்யப்படவில்லை.

பொலிஸ் திணைக்கள வரலாற்றிலேயே பொலிஸ் மா அதிபர் ஒருவரின் நேரடி நடவடிக்கையின் கீழ் இந்த விசாரணைகள் நடைபெற்று வருகிறது. ஏதோ ஒன்றின் அடிப்படையிலேயே இது நடைபெற்று வருகிறது.

எனினும் இந்தக் கொலையோடு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (தே)

### எரிக்சொல்ஹெய்ம் ஆறாம் திகதி வருகிறார்

நோர்வேயின் இலங்கைக்கான சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அடுத்த மாதம் ஆறாம் திகதி இலங்கை வந்து சமாதான முயற்சிகளில் மீண்டும் ஈடுபடவிருப்பதாகத் தெரியவருகிறது.

சொல்ஹெய்ம் இலங்கைக்கு வரமுன்னர் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசுவார் என்றும் தெரியவருகிறது. (01)

# இறுதித்தீர்வின் அடிப்படையிலான பேச்சுக்கு ஐக்கிய தேசியக் கட்சி – ஜே.வி.பி. ஆதரவு!

## உறுதியளிக்கிறார் ஜயந்த தனபால

(கொழும்பு)

அரசும் - விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இறுதித் தீர்வுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவது உறுதி என்று, சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் புதிய சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வை எட்டுவதறகு ஜனாதிபதி சந்திரிகா முன்வந்தால், அந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு ஜே.வி.பி. தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் இறுதித்தீர்வுக்கான பேச்சு நடத்துவதற்கு தாம் ஆதரவு தெரிவிப்பதாகக் கூறியுள்ளது.

இறுதித்தீர்வை எட்டுவதற்கு சமஷ்டி முறையில் அரசியல் அமைப்பு திருத்தி அமைப்பதற்கான ஆலோசனையை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதற்கான சூழ்நிலை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (தே)

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவே இலங்கை விவகாரத்தில் தலையிட்டோம்

## நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுவதற்காகவே இலங்கை விவகாரத்தில் நோர்வே அரசு தலையிட்டதே தவிர, நோர்வே அரசின் தேவைகளுக்காக அல்ல என, நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

எமது ஆதரவைப் பெற்றுகொள்வதற்காக இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கை அரசுக்கு எமது ஆதரவு தேவைப்படும் காலம் மாத்திரமே, நாங்கள் சமாதான செயற்பாடுகளுக்கு உதவி வழங்குவோம். இரு தரப்பினரின் தேவைகளை நிறைவு செய்யும் அளவுக்கு நாங்கள் இங்கு தங்கியிருப்போம்.

தேவையில்லாவிட்டால் நாங்கள் விலகிக்கொள்வோம். அதுவரை சமாதானத்தை தோற்றுவிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவோம்.

இரு தரப்பினருக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதே எமது செயற்பாடுகளையும், ஒத்துழைப்பையும் வழங்குவோம்

இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது உயர்மட்ட அரசியல்வாதிகளால் மாத்திரம் செய்யக்கூடிய செயலல்ல. கிராமிய மட்டத்திலான தலைவர்களும் முக்கிய பங்கைச் செய்ய வேண்டியுள்ளது.

மேலும் அந்த சமூகத்தினரும் முக்கியமான, விசேடமான வேலைப் பங்கைச் செய்யவேண்டியுள்ளது. சமாதானம் தோற்றம் பெற்றால், இந்த நாட்டில் விரைவாக அபிவிருத்தி உண்டாகும். அதன் மூலம் தயாரிப்புக்களும், தொழில் வாய்ப்புக்களும் அதிகரிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### கூரைவிரிப்புகள் விநியோகம்

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள குடிசை வீட்டில் வாழுகின்றவர்களுக்கு, தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக, யு.என்.எச்.சி.ஆர். உதவித் திட்டத்தின் மூலம் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தால் கூரைவிரிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 250 இற்கும் மேற்பட்ட கூரைவிரிப்புகள் வழங்கப்பட்டன. (20)

# ஈ.என்.டி.எல்.எவ் செயலாளர் கருணா குழுவால் கடத்தல்!

ஈ.என்.டி.எல்.எவ் செயலாளராக இருந்தவரும் - கருணாவுடன் இணைந்து தமிழீழ ஐக்கிய முன்னணி என்ற பெயரில் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கிய இணைப்பாளருமான மனோமாஸ்ரர் எனப்படும் இராசரத்தினம், உள் முரண்பாடுகளால் கருணா தரப்பினரால் கடத்தப்பட்டிருப்பதாக ஈ.என். டி.எல்.எவ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

ஈ.என்.டி.எல்.எவ்வின் செயலாளரான இராஜரட்ணம் (மனோ மாஸ்ரர்) கருணா தரப்பினரால் கடத்தப்பட்டதாக ஈ.என்.டி.எல்.எவ் வட்டாரங்கள் நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டின. கருணா தரப்புக்கும், ஈ.பி.டி.பிக்கும் இருந்த தொடர்பு காரணமாகவும், கருணா தரப்பினரால் கொடுக்கப்பட்ட சில வாக்குறுதிகள் நிறை வேற்றப்படாததையிட்டும் அண்மையில் ஏற்பட்ட கசப்புகள் கடும் முரண்பாடாக மாறியதன் எதி ரொலியாகவே கருணா தரப்பினர் இராசரத்தினத்தைக் கடத்தியதாக ஈ.என்.டி.எல்.எவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் இந்தியாவிலிருந்து வந்த ஈ.என்.டி.எல்.எவ் ஐ சேர்ந்த விஜயன் என்பவர் 24.10.2004 அன்று கொழும்பு வந்து இறங்கிய போது, அவரை ஏற்றிவர கருணா தரப்பினர் ஈ.பி.டி.பியினரை ஏற்பாடு செய்திருந்தாகவும், இந்தத் தொடர்பு கருணா தரப்புக்கும், ஈ.என்.டி.எல்.எவ் இற்கும் உள்ள ஒப்பந்தத்துக்கு முரணானது எனவும் இராஜரட்ணம் சுட்டிக்காட்டியதிலிருந்தே பிரச்சினை ஆரம்பித்ததாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன

கருணா தரப்புடன் சேர்ந்து தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணி (TIVM) என்ற அமைப்பை உருவாக்கிய போது, ஈ.பி.டி.பியுடன் அனைத்து உறவுகளையும் கருணா தரப்புக் கைவிடவேண்டும் என்று ஈ.என்.டி.எல்.எவ் நிபந்தனை விதித்திருந்தது. இதற்கு கருணா தரப்பும் உடன்பட்டிருந்தது.

1987 ஆம் ஆண்டு புளொட் அமைப்பிலிருந்து பிரிந்த பரந்தன் ராஜன் அணியினரையும், ஈ.பி.ஆர். எல்.எவ் இலிருந்து விலத்தப்பட்டிருந்த டக்ளஸ் தேவானந்தாவையும் இணைத்தே இந்தியப் புலனாய்வுத்துறை ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பை உருவாக்கியது. இந்த அமைப்பு உருவாக்கப்பட்ட ஓரிரு மாதங்களில் டக்ளஸ் தேவானந்தாவை பரந்தன் ராஜன் அணியினர் ஈ.என். டி.எல்.எவ் விலிருந்து நீக்கியதுடன் நீண்டகாலம் டக்ளஸ் தேவானந்தா இந்தியச் சிறையில் அடைப்பட்டுக் கிடப்பதற்கும் அவர்களே காரணமாக இருந்தனர் என டக்ளஸ் தேவானந்தா குற்றஞ்சாட்டியிருந்தார்.

கருணா தரப்புடன் சேர்ந்து இயங்க, விஜயன் என்பவர் ஈ.என்.டி.எல்.எவ் ஆல் இந்தியாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டார்.

விஜயன் என்பவர் திருமலையைச் சேர்ந்தவர். இவரது சொந்தப் பெயர் கார்த்திகேசு பேரின்பன். இன்பன் என்றும் இவர் அழைக்கப்படுவார். இவர் முன்னாள் புளொட் உறுப்பினர். இந்தியப்படைகள் இலங்கை வந்த காலகட்டத்தில் ஈ.என்.டி.எல்.எவ் வுடன் இணைந்து செயற்பட்டார். பின்னர் இந்தியா சென்று சேலம் தம்பம்பிட்டி அகதி முகாமில் வசித்து வந்தார்.

விஜயன் இங்கு வந்து கருணா தரப்புடன் செயற்பட ஆரம்பித்ததும், தான் ஒரு மூத்த உறுப்பினர் என்பதால் சில பொறுப்புக்கள் தன்னிடமே விடப்படவேண்டும் என்று கேட்டதாலும், கசப்புணர்வு ஏற்பட்டதாக ஈ.என்.டி.எல்.எவ் வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்பில் மாளிகாவத்தை, போதிராஜ மாவத்தையிலுள்ள விகாரையிலும் கருணா தரப்பு தங்கிச் செயற்படுவதற்கு சிஹல உறுமய ஒழுங்கு செய்து கொடுத்திருந்தது.

இந்த விகாரையில் வைத்தே கருணா தரப்பைச் சேர்ந்த இனிய பாரதிக்கும், இராசரத்தினத்துக்கும் ஈ.பி.டி.பியுடனான உறவு தொடர்பாகவும், விஜயனின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அது முற்றிய நிலையில் இராசரத்தினம் கூடடிலிருந்து தாங்கள் வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை எனவும், கருணா தரப்புக்குத் தாம் கொடுத்த பணம் மற்றும் சில பொருட்களையும் தமக்குத் திருப்பித் தர வேண்டுமெனவும் கூறி அன்று வெளியேறியதாகவும், இதைத் தொடர்ந்தே கருணா தரப்பு இராசரத்தினம் கடத்தியதாகத் ஈ.என்.டி. எல்.எவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கருணா தரப்பு தம்மிடம் பெருந்தொகையான ஆட்கள் இருப்பதாகவும், அவர்களைப் பராமரிப்பதற்குப் பணம் தேவையெனவும் கூறியே மூன்று தடவைகளில் தம்மிடம் பணம் பெற்றுக்கொண்டதாகவும், இது பிழையான தகவல் என்பதை விஜயன் கண்டறிந்து கூறியதாகவும் இராசரத்தினத்துக்கு நெருக்கமான ஈ.என்.டி.எல்.எவ் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# இந்தியாவுடனான 2 ஆவது டெஸ்ட்

# தென்னாபிரிக்கா 5 விக்கெட்டுக்கு 227



இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நேற்றுத் தொடங்கிய இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் தென்னாபிரிக்க அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றையதினம் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதன்படி அவ்வணி சார்பாக அணித்தலைவர் சிமித்தும் அன்ட்ரு ஹோலும் களமிறங்கினர். ஆனால் பதான் வீசிய முதலாவது ஓவரின் இரண்டாவது பந்தில் விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக்கிடம் பிடி கொடுத்து ஓட்டமெதுவும் பெறாமல் சிமித் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஹோலுடன் ருடோல்ப் இணைந்தபோதும், அன்ட்ரு ஹோல் 7 ஓட்டங்களைப் பெற்றநிலையில் சகீர்கானின் பந்து வீச்சில் விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் தென்னாபிரிக்க அணி 21 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டுக்களை இழந்து தவித்த நிலையில் ருடோல்ப்புடன்



கலிஸ் இணைந்தார். இவர்கள் இருவரும் தமது மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டமாக 109 ஓட்டங்களைப் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

இந்த நிலையில் ருடோல்ப் 61 ஓட்டங்களைப் பெற்றநிலையில் சகீர்கானின் பந்து வீச்சில் போல்டானார். இதன்பின்னர் கலிஸுடன் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடும் அம்லா இணைந்தார். இவர் 24 ஓட்டங்களைப் பெற்றநிலையில் பதானின் பந்துவீச்சில் போல்டானார்.

அடுத்து கலிஸுடன் டிப்பெனார் இணைந்தார். இவரும் ஒரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் பதானின் பந்துவீச்சில் விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் கலிஸுடன் புருன் இணைந்தார். இவர்கள் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 103, 15 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். அத்துடன் இந்தியாவுக்கு எதிராக கலிஸ் பெற்றுள்ள முதல் சதமும் இதுவாகும்.

பந்துவீச்சில் இர்பான் பதான் 3, சகீர்கான் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இரண்டு அணிகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் முரளி கார்த்திக்குக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் பதான் சேர்க்கப்பட்டுள்ளார்.



தென்னாபிரிக்க அணியில் ஜாரஸ் வெல்ட், மற்றும் ரொபின் பீற்றர்ஸன் இருவருக்கும் பதிலாக ஜஸ்ரின் ஒன்வாங் மற்றும் அம்லா இருவரும் இணைக்கப்பட்டுள்ளனர்.

# அவுஸ்ரேலியாவுடனான 2ஆவது டெஸ்ட்

# தோல்வியின் விளிம்பில் நியூஸிலாந்து



அவுஸ்ரேலிய, நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் அடிலெய்டில் நடந்துவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேரமுடிவில் நியூஸிலாந்து தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 251 ஓட்டங்களை மட்டுமே பெற்று மிகவும் நெருக்கடி நிலைக்குள் தள்ளபட்டுள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்று தனது முதல் இனிங்ஸை விளையாடிய அவுஸ்ரேலிய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 575 ஓட்டங்களைக் குவித்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

இந்த அணியின் மைக்கல் கிளார்க் மற்றும் மார்ட்டின் இருவரையும் தவிர மற்றைய அனைவரும் அரைச்சதத்திற்கு மேல் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதில் ஆரம்ப ஆட்டக்காரர் லாங்கர் 368 பந்துகளை எதிர்கொண்டு 3 சிக்ஸர், 25 பவுண்டரிகள் அடங்கலாக 215 ஓட்டங்களைக் குவித்தார். இதன் மூலம் இவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் மூன்றாவது முறையாக இரட்டைச் சதத்தைப் பெற்றுள்ளதுடன் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 3 முறை இரட்டைச் சதம் பெற்றவர்கள் வரிசையில் 20 ஆவது இடத்தில் உள்ளார்.

மற்றைய வீரர்களான ஹைடன் 70, பொண்டிங் 68, டரன் லீமன் 81, கில்கிறிஸ்ட் 50, ஷேன்வோன் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும் மார்ட்டின் மற்றும் கிளார்க் இருவரும் தலா 7 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் டானியல் விற்றோரி 5, வைஸ்மன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் பின்னர் தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்திற்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது. அவ்வணி 2 ஓட்டங்கள் பெற்றநிலையில் சிங்கிளெயர் ஓட்டமெதுவும் பெறாமல் ஜிலெஸ்பியின் பந்துவீச்சில் வோனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் அணித்தலைவர் பிளெமிங் வந்தபோதும் மறுபக்கத்திலிருந்த விக்கெட்டுக்களை அவுஸரேலியப் பந்து வீச்சாளர்கள் வீழ்த்தியபடியே இருந்தனர். நியூஸிலாந்து அணிசார்பில் பிளெமிங் மற்றும் அஸ்ரில் இருவரைத்தவிர மற்றைய அனைவரும் குறைந்த ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தனர். இறுதியில் அவ்வணி 251 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்த அணிசார்பாக அணித்தலைவர் பிளெமிங் 83, நதன் அஸ்ரில் 52, ஸ்ரைரிஸ் 28, விற்றோரி 20 ஓட்டங்களைப் பெற்றதுடன் மற்றைய அனைவரும் 12 இற்கும் குறைவான ஓட்டங்களையே பெற்றனர்.

பந்துவீச்சில் மக்ரா 4, ஜிலெஸ்பி 3, கஸ்பரோவிச் 2, ஷேன்வோன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். ஷேன்வோன் பிராங்கிளினின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 550 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார்.

324 ஓட்டங்களால் நியூஸிலாந்து பின்தங்கியுள்ள நிலையிலும், அவுஸ்ரேலியா தனது இரண்டாவது இனிங்ஸை விளையாடுகின்றது. இதன்படி ஆரம்ப வீரர்களான ஹைடனும், லாங்கரும் ஆட்டமிழக்காமல் முறையே 21, 31 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். இந்த இரண்டாவது இனிங்ஸில் ஹைடன் 10 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக 1000 ஓட்டங்களைக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்நாள் சாதனையாளர் விருது கபில்தேவிற்கு வழங்கப்பட்டது




காஸ்ட்ரோல் நிறுவனம் முன்னாள் இந்திய கப்டன் கபில்தேவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கியுள்ளது.

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு காஸ்ட்ரோல் நிறுவனம் சார்பில் ஆண்டு தோறும் சிறப்பு விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர்கள் விருதை டெண்டுல்கர் மற்றும் ராவிட் ஆகியோர் இணைந்து பெற்றுக்கொண்டனர்.

இந்த முறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதை முன்னாள் இந்திய கப்டன் கபில்தேவ் தட்டிச்சென்றார். 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கபில்தேவ் 434 விக்கெட்டுக்கள் கைப்பற்றி உள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணி சார்பாக அதிக விக்கெட் சாய்த்த வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றிருக்கிறார். இவர் தலைமையிலான இந்திய அணி 83 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்று சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

## ஆசிய கூடைப்பந்து போட்டி

# அரையிறுதி வாய்ப்பை இந்தியா இழந்தது

ஆசிய சம்பியன்ஷிப் கூடைப்பந்துப் போட்டியில் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது.

சீன தைபேநகரில் ஆசிய சம்பியன்ஷிப் கூடைப்பந்துப் போட்டி நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் ஆசியாவின் முன்னணி ஆணிகள் பலவும் விளையாடி வருகின்றன. "ஏ" பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி, பலமிக்க கொரியாவை வீழ்த்தி வெற்றியுடன் போட்டியை தொடக்கியது. ஆனால் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சீன தைபேயிடம் தோல்வீ அடைந்தது. இதன் மூலம் ஆரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இந்திய அணி இழந்தது.

குவைத்திற்கு எதிரான மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இரு அணிகளுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. இறுதியில் இந்தியா 71-63 என்ற புள்ளி கணக்கில் குவைத்தை வீழ்த்தியது. அதிகபட்சமாக சிவகுமார் 21 ரொபின்சன் 14 புள்ளி எடுத்தனர். மூன்று லீக் சுற்றுக்கள் முடிந்த நிலையில் சீன தைபே, கொரியா முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன. அடுத்ததாக இந்திய அணி நான்காவது இடத்திலுள்ள பிலிட் பைன்ஸை எதிர்த்து விளையாடுகிறது.


## அரசாங்க அறிவித்தல்

## அரசினர் பொது வைத்தியசாலை - யாழ்ப்பாணம்

**2005 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் நிறுவனங்களும் மேற்படி வழங்குநர்களைப் பதிவுசெய்துகொள்ள விண்ணப்பிக்கலாம்.

01. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
02. கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள்
03. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
04. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்
05. சமுர்த்தி முகாமையாளர்கள்
06. உரிய அதிகாரிகளால் அங்கிகரிக்கப்பட்ட ஸ்தாபனங்கள்.

**அ.பொருட்கள்.**

01. காகிதாகிகள், எழுதுபொருட்கள்
02. ஈர்க்கில் தடி, தும்புத்தடி, பாய்
03. பாவனைப் பொருட்கள் (சவர்க்காரம், தீப்பெட்டி, விம், காப்பிக், சவரஅலகு முதலியன.)
04. மரத்தளபாடங்கள் வைத்தியசாலை பாவனைக்குரியவை (கட்டில்கள், மேசைகள், கதிரைகள், வாங்குகள் முதலிய்ன)
05. துணிவகைகள், வைத்தியசாலை பாவனைக்குரியவை (சீருடைத்துணி, கோடிட்டதுணி, படுக்கைவிரிப்பு, துவாய் முதலியன)
06 உருக்குத் தளபாடங்கள் வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (அலுமாரிகள், கட்டில்கள், சேலைன் நிலைகள் முதலியன)
07. கட்டடப்பொருட்கள் (சீமெந்து, பெயின்ற், ஆணிகள், கல், மணல் முதலியன)
08. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர் ரியூப், பற்றறிகள், முதலியன)
09. அரிந்த பனைமரங்கள், சலாகைகள், அரிந்த ஏனைய மரங்கள். (நிலைகள், ஜன்னல்கள், கதவுகள், உள்சீற் பொருத்துவதற்குரிய மரங்கள் முதலியன)
10. நீர் வழங்கு பொருட்கள் (பீ.வீ.சி, குழாய்கள் முதலியன)
11. ஏனைய பாவனைப் பொருட்கள் (பிளாஸ்ரிக் வாளி, குப்பைக் கூடை, சுவர்மணிக்கூடு முதலியன)
12. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருட்கள் (பூட்டுக்கள், வாளி, மண்வெட்டி முதலியன)
13. சப்பாத்துக்கள், செருப்புக்கள், இறப்பர் செருப்புக்கள்
14. றெக்சின், பொலித்தீன், வகைகள்
15. மின்சார உபகரணங்கள், மின்சார உதிரிப்பாகங்கள் (வயர், மின்குமிழ்கள், பிளக், கோல்டர் முதலியன)
16. இறப்பர் முத்திரைகள்
17. மருந்து வகைகள், பால்மா வகைகள்
18. மெத்தைகள் (சியஸ்ரா, தலையணைகள், நுளம்பு வலைகள் முதலியன)
19. அலுமினியப் பாத்திரங்கள் (சமையலுக்குரிய பெரிய பாத்திரங்கள் உட்பட)
20. கண்ணாடி வகைகள்

**ஆ.சேவைகள்.**

01. உருக்குத் தளபாடத்திருத்தம்
02. மரத்தளபாடத்திருத்தம்
03. மின்சார இயந்திர, மின்சார உபகரணத்திருத்தம் (குளிர்சாதனப் பெட்டிகள், தொற்று நீக்கி இயந்திரம், எக்ஸ் கதிர்யந்திரம், மோட்டார்கள், மின்பிறப்பாக்கிகள், உயர் வைத்திய உபகரணங்கள் உட்பட)
04. கட்டடத்திருத்தம்
05. அச்சுவேலைகள் (படிவங்கள் முதலியன)
06. நீர் இறைக்கும் இயந்திரம், கழிவு அகற்றும் இயந்திரம் திருத்தம்
07. நீர் விநியோகம், மலசலகூட வடிகால் திருத்தம்
08. போக்குவரத்துச்சேவை (பொருட்கள், ஏற்றியிறக்கம்)
09. மோட்டார் வாகன திருத்தம்
10. மோட்டார் வாகன சேவீஸ்
11. தட்டச்சு இயந்திரங்கள், பிரதி எடுக்கும் இயந்திரங்கள் திருத்தம் (றோணியோ இயந்திரம், நிழல் பிரதி எடுக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், கணினி இயந்திரம் தொலைக்காட்சிப் பெட்டி முதலியன சேவீஸ்)
12. அடையாள அட்டைகள் (புகைப்பட மெடுத்துத் தயாரித்து வழங்குதல்)
13. மோட்டார் மீள் முறுக்குதல்
14. தையல் வேலைகள்

*மேற்படி பொருள் விநியோகம், சேவைகளுக்காக பதிவு செய்துகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தை எமது பணிமனையில் ரூபா 100 ஐ பதிவுக்கட்டணமாகச் செலுத்திப் பெற்று 2004.12.28 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

வைத்திய கலாநிதி Dr. எஸ்.சதுர்முகம்
பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C/3414)

முக்கிய குறிப்பு:- ஒவ்வொரு பொருட்கள், சேவைகளுக்குமான பதிவுகள தனித்தனி செய்துகொள்ளவேண்டும்.

# வடமராட்சி வடக்கு அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளுக்கான யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து 3.775 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

கெருடாவில், புலோலி, அல்வாய், தம்பசிட்டி, தும்பளை, துன்னாலை வடக்கு, அவ்வெல்லை, மந்திகை, புலோலி வடமேற்கு, புலோலி மேற்கு, பருத்தித்துறை, பொலிகண்டி, கற்கோவளம், திக்கம், வல்வெட்டித்துறை, மாதனை, தொண்டமானாறு, சுப்பர்மடம், வியாபாரிமூலை போன்ற பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காகவும் -

இவற்றோடு அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலை, துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, அம்பாள் வித்தியாலயம், கற்கோவளம் மெதடிஸ்த மிஷன தமிழ்க் கலவன் பாடசாலை, கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகளுக்காகவும் இந்த நிதி பயன்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)



சுன்னாகம் மக்கள் வங்கியால் அண்மையில் அளவெட்டி அருணோதயா கல்லூரியில் 'சிசு உதான சேமிப்பு' அலகு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் மு.க. சிவபாதவிருதையர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# திருக்குறள் மனனப்போட்டி பரிசளிப்பு விழா நிகழ்வு!

திருக்குறளின் பெருமையை மாணவரிடையே பரப்பும் நோக்கில், தர்மசிந்தனையாளர் ஒருவரின் அனுசரணையுடன் யாழ்.கல்வி வலயம் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவ மாணவியரிடையே நடத்திய திருக்குறள் மனனப் போட்டி பரிசளிப்பு விழாவும், வள்ளுவர் மாநாடும் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விழாவுக்கு - கௌரவிருந்தினராக தமிழ்த் துறைப் பேராசிரியர் அ.சண்முகதாசும், சிறப்புரையாளராக புலவர் ம.க.வே.பார்வதிநாதசிவமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கணிசமான அளவு திருக்குறளை மனனம் செய்து ஒப்புவித்த மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன.

இந்நிகழ்வில் பொதுமக்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் யாவரும் கலந்துகொள்ளுமாறு அமைப்புக் குழு செயலாளர் எம்.எஸ். ஸ்ரீ தயாளன் கேட்டுள்ளார். விழாவின் இறுதியில் வள்ளுவன் புகழ்பாடும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (101)



ஆசிரிய சேவையில் 40 வருடங்களைப் பூர்த்திசெய்து இளைப்பாறும் தட்டாதெரு அ.த.க.பாடசாலை அதிபர் எஸ்.சந்திரசேகரத்துக்கு பாடசாலை அபிவ்ருத்திச் சபை நடத்திய பாராட்டு விழாவில், அபிவிருத்திச் சபைச் செயலாளரால் அன்பளிப்பு வழங்கப்படுவதைக் காணலாம். (17)

# சைவபரிபாலன சபை நடத்திய கட்டுரைப்போட்டி முடிவுகள்!

ஆறுமுக நாவலரின் 125 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு, சைவ பரிபாலனசபையினர் மாணவர்களிடையே நடத்திய கட்டுரைப் போட்டியில் பரிசுபெறும் மாணவர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

இந்தப் போட்டியில் கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவி துவாரகா சிவலிங்கம் முதலாம் இடத்தையும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவி யமுனா நாகராஜா இரண்டாம் இடத்தையும், மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி ரிஷிகா யோகநாதன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

முதலாமிடத்தைப் பெற்ற மாணவிக்கு தங்கப் பதக்கமும், இரண்டாம் இடத்தைப்பெற்ற மாணவிக்கு வெள்ளிப்பதக்கமும், மூன்றாம் இடத்தைப்பெற்ற மாணவிக்கு வெண்கலப்பதக்கமும் வழங்கப்படவுள்ளதாக தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

இவர்களுக்கான பரிசில்கள் அடுத்தமாதம் நான்காம் திகதி வழங்கப்படவிருக்கிறது.

## பிரதேச ஒழுங்கமைப்புக் குழுக்கூட்டம்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் மாதாந்தம் வருகின்ற பிரதேச ஒழுங்மைப்புக்குழுக் கூட்டமும், விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டமும் எதிர்வரும் புதன்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (20)

## உலக வங்கி உதவியுடன் வலி.மேற்கில் வீட்டுத்திட்டம்

(சங்கானை)

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் 2005 ஆம் ஆண்டுக்கான வீட்டுத்திட்டம் ஒன்றை உலகவங்கி முன்னெடுக்கவுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் 6 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு- அந்தக் கிராமங்களில் 150 பேருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க உலக வங்கி திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் ஒவ்வொருவருக்கும் 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களும் அந்தந்த கிராம சேவகர் பிரிவுகள் ஊடாகவே தேர்ந்தெடுக்கப்பட்டுவருகிறது. தகுதியான விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர், அவர்களுககான வீடுகள் அமைக்கும் பணி அடுத்த ஆண்டில் ஆரம்பமாகும் எனத் தெரிவருகிறது. (207)



ஸ்ரீபஞ்ஞாசீக வித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வில் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் அயலிலுள்ள மகாத்மாஜீ, சரஸ்வதி, குருநாதர் சனசமூக நிலையங்களின் முன்பள்ளி ஆசிரியையும் கௌரவிக்கப்பட்டனர். (110)

# சங்கானை பிரதேச அபிவிருத்திக்கு மூவிமொண்டோ நிதி ஒதுக்கீடு

மூவிமொண்டோ நிறுவனம் அடுத்த ஆண்டில் சங்கானை பிரதேச செயலக்த்துக்கு உட்பட்ட பகுதிகளில் வறிய மக்களுக்கான மலசலகூடங்களை அமைத்தல், மலசலகூடங்கள் திருத்தம் மற்றும் புதிய பொதுக்கிணறுகளை அமைத்தல் மற்றும் பொதுக் கிணறுகளின் திருத்தம் போனற வேலைத்திட்டங்களை மேறகொள்ளவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் இப்பிரதேசத்தின் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவூடாகச் சேகரிக்கப்பட்டு வருகின்றன. பின்னர் தகுதியான விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு- பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கான வேலைகள் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பமாகும் எனவும் தெரியவருகிறது. (207)

# இலங்கை ஆசிரியர் சங்க கலந்துரையாடல்

இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டக் கிளையினா் மீளக் குடியமரமுடியாத வீடுகளின் உரிமையாளர்களின் விபரங்களைத் திரட்டிவருகின்றது.

கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளின் உரிமையாளர்களின் விபரங்களைத் திரட்டும் முகமாக, விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்வதற்குரிய அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான கலந்துரையாடல், கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் - யாழ்ப்பாணம், தீவக வலய ஆசிரியரியர்களுக்கு இன்றுமுதல் 30 ஆம் திகதி வரையும் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, திரு இருதயக கல்லூரி, கரவெட்டி ஆகிய பாடசாலைகளில் இடம்பெறும்.

இதேவேளை. முன்னர் படிவங்களைப் பெற்றவர்கள் அவற்றைப் பூர்த்திசெய்து கலந்துரையாடல் இடம்பெறும் இடங்களில் மீளளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென செயலாளர் அ.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

## கோப்பாய் — மானிப்பாய் வீதியை திருத்தக் கோரிக்கை

கோப்பாய் - மானிப்பாய் வீதி நீண்டகாலமாகச் செப்பனிடப் படாது உள்ளதால் இந்த வீதியூடாகப் பயணஞ்செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர். குன்றும் குழியுமாக உள்ள இந்த வீதியைச் செப்பனிடுவதற்காக ஏற்கனவே கற்கள் குவிக்கப்பட்டு நீண்டகாலமாகியும் இதுவரை திருத்தப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளபோதும், இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவித்ததனா். (90)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : சாள்ஸ் வில்பர்
முகவரி : நாவற்குழி

நான்காவது அகவையில்



பெயர் : பி.தபேந்திரா
முகவரி : கொக்குவில்



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை நலன்புரிச் சங்கம், பொது மக்களுடன் இணைந்து அண்மையில் நடாத்திய ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் மாணவர்கள் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (14)

# குன்றும் குழியுமாக இருக்கும் வண்ணை வயற்கரை வீதி

(கொக்குவில்)

வண்ணார்பண்ணை வடமேற்கு வயற்கரை வீதி குன்றும் குழியுமாக இருப்பதால் அந்த வீதியால் பயணம் செய்யமுடியாமல் இருப்பதாகத் தெரியவருகிறது.

கோம்பையன் மணல் மயானப் பகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ள இந்த வீதி, பல வருடங்களாகக் கவனிப்பாரின்றிக் காணப்படுகிறது.

வயற்கரை ஓரமாகச் சில பகுதிகள் உயரமாக அமைந்துள்ள வீதியின் கரையோரம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதால் இரவு நேரங்களில் அந்த வீதியில் செல்வோர் வயற்பள்ளங்களில் வீழ்ந்து விபத்துகளுக்குள்ளாகும் அபாயம் இருந்து வருகிறது.

(206)



# கலாசரம்

## பொக்கிசம்

அறுபதுகளில் தமிழ் எழுதத் தொடங்கிய சிறந்த படைப்பாளி செ.கதிர்காமநாதன், ஆழ்ந்த சிந்தனை வளமும், கற்பனைத்திறனும், எழுத்து வன்மையும் கதிர்காமநாதனிடம் நிறைந்திருந்தன. கதிர்காமநாதனுடைய இலக்கியக் கோட்பாடு அவரால் பல தடவை சொல்லப்பட்டுள்ளது.

இதை அவர்மிகவும் தெளிவாக சொல்கிறார். 'கலையும் இலக்கியமும் மக்களுக்காக என்ற கோட்பாட்டை நான் தழுவி நிற்பவன். ஒடுக்கப்பட்ட மக்களது வாழ்க்கையும், பிரதிபலிப்புக்களும் விளைவுகளுமே என் கதைகளின் உள்ளடக்கம்' கதிரகாமநாதன் இந்த இலட்சியத்துடனேயே கடைசிவரை எழுதினார்.

கதிர்காமநாதன் சிறந்த சிறுகதையாளனாகவும், மொழிபெயர்ப்பாளனாகவும் விளங்கியிருக்கின்றார். அவருடைய 'கொட்டும் பனி' ஈழத் தமிழில் வெளியாகியுள்ள சிறந்த சிறுகதைகளில் ஒன்று. 1968 ஆம் ஆண்டு இது இலங்கை சாகித்திய மண்டலத்தின் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான விருதைப் பெற்றுக்கொண்டது.

கதிர்காமநாதன் வங்காள, ஹிந்தி மொழி சிறுகதைகளும், ஆங்கிலத்தின் ஊடாக தமிழிலே மொழி பெயர்த்திருக்கிறார். கிருஸ்ஸன் சந்தர் எழுதிய 'நான் சாகமாட்டேன்' என்ற தொகுதியை இவர் தமிழில் இருந்து மொழிபெயர்த்து இவரின் மரணத்தின் பின்னால் அது நூல் வடிவில் வெளிவந்திருக்கிறது.

வேறு வேறு பெயர்களில் கதிர்காமநாதன் வீரகேசரி நிறுவனத்தின் பத்திரிகைகளுக்கு விடயம் எழுதியிருக்கிறார். அவை நூல் உருப்பெறவில்லை என்பது கவலைக்குரியது. 'நான் சாகமாட்டேன்' நூலாக வெளியிட வீரகேசரி பிரசுரத்தினர் இந்தக் கட்டுரைகளையும் நூலாக வெளியிட்டால் அது நமது இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும்.

கதிர்காமநாதன் நிறைய இலக்கியக் கனவுகளை மனதினுள் வைத்திருந்தார். பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது இளங்கதிர் பத்திரிகையின் ஆசிரியராக இவர் பணிபுரிந்தார். இந்த இளங்கதிரின் மலரை ஒரு சிறந்த இலக்கியப் பெட்டகமாக செ.கதிர்காமநாதன் வெளியிட்டார்.

இலங்கை நிர்வாக சேவையில் 1971 ஆம் ஆண்டு இவர் தெரிவானார். அப்பொழுது ஒரு சிறந்த இலக்கிய இதழை வெளியிடுவதற்கான முயற்சிகளை இவர் மேற்கொண்டார். அதற்கான ஆக்கங்கள், படங்கள் என்பனவற்றை இவர் உருவாக்கினார். ஆனாலும் முப்பது வயதுக்குள் மரணம் அந்த அற்புதமான படைப்பாளியை அள்ளிச் சென்றுவிட்டது.

யாழ்ப்பாணத்து கிராம மக்களின் வாழ்வினையும், வளத்தினையும் மண்மணம் கமழ தமிழுக்குத்தந்த செ.கதிர்காமநாதன் ஈழத்தமிழ் இலக்கியத்தில் முழுமையாக வெளிப்படுத்தப்படவேண்டும். அவருடைய ஒரே மகனான ராகுலன் இந்த முயற்சியில் ஈடுபடுவது தமிழுக்கு வளமும், வனப்பும் சேர்ப்பதாக அமையும்.

*செ.யோகநாதன்*

# யாழ்ப்பாணம் இங்கே வாழ்கிறது!

## சிறுகதை




காலை எழுந்ததும் எழாததுமாக, மனைவியுடன் அவர்கள் மத்தியில் கவிந்த பொருளாதாரக் கஷ்டங்களைக் கதைத்து. அநியாயமாக மனக்கொதிப்படைந்ததுதான் மிச்சம்போல முத்தையருக்குப்படுகிறது. அது காய்ச்சலில் கிடந்தவனது வாட்டத்தைக் கொடுத்து. சதா அதேவியூகத்துள் அவர் தன்னை வாட்டிக் கொண்டிருந்ததால். ஏதாவது வேலை செய்து தன்னை மறக்கடிக்க வீட்டுக்கோடிக்குப் பின்னால் முத் தையர் செல்கிறார்.

வீட்டுக் கோடிக்குப் பின்புறம்...

உடைந்துபோன வண்டிச்சில்லுகள். உழவு கலப்பைகள் பயன் ஒழிந்த பட்டைக் கற்கள்.

ஒன்றைப் பார்த்ததும் வேதனை சகிக்காது மறு பக்கம் திரும்பினால் அங்கும் வேதனையே காத்து நிற்பதுபோல கோடிப் பின்புறம்வந்ததும் நிம்மதியில்லை. வீட்டிலே சுமுகமாய் கல கலப்பாய் ஒருவித இன்பத்தை மிளகாய்ச்செடி பூராக நிறைந்த மலர்கள்போலச் சொரியும் நல்ல பொழுதொன்றை எந்தப் பிரச்சினையையிட்டுக் குழிபறித்தாரோ அதே பிரச்சினை ஏரில். வண்டிச் சில்லுகளில் தெரிகிறது.

ஒன்றன்பின் ஒன்றாக ஒன்று கலக்கும் நீரோட்டம்போன்று கஷ்டங்கள். துயரங்கள். ஏக்கங்கள் சாரலடிக்கையில் நாலாம் வகுப்பில் படித்த பழைய தமிழ் பாடலொன்று அத்தனை நெருக்கடியிலும் குதிப் போடும். ஆ, ஈனுகிறது: மழை பொழிகிறது, இல்லம் வீழுகிறது, ஆனாலும் மா ஈரம் காயக்கூடாதென்று விதை கொண்டு ஓடுகிற அந்தப் பழைய விவசாயியை அவருக்கு நிறையப் பிடித்திருந்தது.

வாடைக்காற்று யாழ்ப்பாணத்தை நோக்கி வீசத் தொடங்கியிருந்ததால். உஷ்ணம் செறிந்த வானம் கறுத்து மழை குதிகுதியென்று குதிக்கும் காலம் வந்து வெப்பத்தில் தோல்வெடித்துப் பிளந்த நிலங்கள். நீர் குடித்து உடல் சிலிர்க்கையில் பருவத்தைப் பக்குவப்படுத்தும் உழவுக் கலப்பைகளின் அரவணைப்புக் கிட்டுகிறது. மேனி மினுங்குகிறது. ஈரவாடை நாசியைத் துளைக்கிறது.

வயல் நிலங்களை அவரும் உழத்தான் வேண்டும்!

'செல்லம்... பவுத்திரமா வையென்று சொல்லித்தந்த காசை அவதானமா வைச்சிருக்கிறாய் தானே... இங்கை, என்னட்டை அது இருந்தா கள்ளு, தண்ணியிலை செலவழிஞ்சு போகும் எண்டுதான் உன்னட்டைத் தந்தனான்... இப்ப வயலை உழுவிக்க வேண்டியிருக்கிறதாலை, இறாய்க்ரர் வைச்சிருக்கிற பொன்னப்பாவுக்குக் குடுக்கவேண்டிய கடன் காசைக் குடுத்தமெண்டால் உழுவிக்க லேசாயிருக்கும்...'

வாழ்நாள் பரியந்தம்வரை தரவை நிலத்து விழவு மரமாய் வருடங்கள், மாதங்கள், நாட்கள் அனைத்திலும் புதிது புதிதாகப் பிறந்து. புதுக்கவலைகளாய் செல்லரித்து நஞ்சு திணிக்கும் அதே பிரச்சினை அவளை நடுங்க வைக்கிறது. அவர் கேட்ட அந்தக் காசை நேற்றுவரை அவர் ஏன் கேட்காமல் இருந்தார்? நேற்றுத்தான், கட்டி வந்த சீட்டுக்காசை இந்தத் தவணை நாணயம் தவறிவிட்ட வெட்கத்தில், ஈடுசெய்ய, சீட்டுக் கட்டிய தலைவி வந்ததும் எடுத்து வீசியிருந்தாள்... அவர் நேற்றே கேட்டிருக்கக் கூடாதா... கேட்டிருந்தால், இப்பொழுது அவள் நடுங்கமாட்டாள்...

சீட்டுக் காசுக்கு அது மாற்றாகப்போய் விட்டதைச் சொன்னால் அவர் கோபிக்காமல் இருக்க வேண்டுமே...

'இண்டை, நாளைக்கிடையிலை, எப்படி யாவது உழுதுபோடவேணுமெண்டு இருக்கிறன். இன்னும், இறாய்க்ரர் பொன்னப்பாவுக்கு எவ்வளவு குடுக்குமதி இருக்குமெண்டு உனக்குத் தெரியும்தானே... அடுத்து, இந்தமுறை உமியும் செம்மண்ணும் பள்ளக்கை நிலங்களுக்குக் கொட்டுறதா இருந்தனான்... ஆசை இருந்தென்ன காசுதானே முக்கியம். நிலங்களைச் செய்கை நிலமாக்கிப் போட்டமெண்டால் சின்னக் கறுப்பன் நெல்லாலை அவை சும்மா நிறைஞ்சு கிடக்கும்.

முத்தையருக்கு இப்படிச் சொன்னதுமே வயல் முழுவதும் சின்னக் கறுப்பன் நெற்பயிர்கள் கெம்பீரமாகக் கரும்பச்சைத் தாழ்களை அசைத்துக் கொண்டு குடலை தள்ளிநிற்பன போல் இருக்கிறது. சென்றவருடம். அதற்கு முந்தியவருடம். அதற்கு முன்னரும் பள்ளக்கை நிலங்களெல்லாம் உமியும் செம்மண்ணும் நிறைந்து சின்னக் கறுப்பன் நெல்கள் ஓங்கிவளரும் எனப் பொச்சடித்துக்கொண்டுதான் வருகிறார். ஆனால்... பள்ளக்கை நிலம் மாறவில்லை!

'என்ன நான் காசைப்பற்றிக் கேட்கிறன். நீ பேசாமல் இருக்கிறாய்... முந்தி உழுத காசிலும் கொஞ்சம் குடுக்காமல் கிடக்குது... அதோடை போய் இறாய்க்ரரை உழக் கேட்டா அந்த மனுஷன் சள்ளென்று கட்டாயாம் சீறாமை இருக்காது... அந்த மனுஷி பொன்னரப்பா பெண்டில் தெருவாலே போக வர விடாது. ஒவ்வொருநாளும் கேட்டபடி... சீ... குடுக்காமைப் போனால் சீலை உரிஞ்சு போடுங்கள்.'

காரமாக அவர் காசைப்பற்றிக் கேட்கிறார். அந்தக் காரத்தினூடே பார்த்துப் பாராமல் உழைத்து வலிந்ததசை இறுகிய கைகளால் நோய் பூத்ததன் உடலை அடித்து நொறுக்கிவிடும் முரட்டு ஆத்மா சிலிர்த்தெழுவது தெரியவே. எந்த அடிகளும் விழு முன்னர். முன்னர் விழுந்த அடிகளின் நோவெல்லாம் திரண்டு உடலெல்லாம் புண்ணாகிவிட்டவளைப் போன்று அழுகை கலக்கச் சொல்லுகிறாள்...

இன்னும் சீட்டுக்காசு குடுக்காமை இருந்தனான். நேற்றுத்தான் - உங்களுக்குத் தெரிஞ்ச மனுஷிதானே - அது வந்துநிண்ட நிலையைப் பார்த்து வேறு வழியில்லாமல் நீங்கள் தந்த காசை எடுத்துக் குடுத்திட்டன்...

என்னைக் கேளாமல் காசிலை ஏன் கை வைச்சனி...

ஏன் உங்களின்ரை உழைப்பிலை எனக்கு உரிமை இல்லையே? சீட்டுக்காசு குடுக்காமலும் என்னெண்டு இருக்கிறது? உங்களுக்கென்ன ஆம் பிளையள் ஒரு நேரம் நிண்டு இந்தக் குடும்பப் பொறுப்பைக் கவனிச்சியளெண்டால் ஒரு பொம்பிளைக்குள்ள கரைச்சல் தெரியும்?

வாய்க்கொழுப்பைப் பார். செய்கிறதையும் செய்து போட்டு...

அவருக்குக் கோபம். தோள் துவாயை இழுத்து எடுத்து உதறிய உதறலில் முழுப் பிரதிபலிப்பும் உறைய ஆண்மையின் முரட்டுப் பிடிவாதத்திற்கும் மூர்க்கத்திற்கும் முத்தையரும் விதிவிலக்காகாமல் விதிவிலக்காகிவிடக்கூடாதென்ற கட்டுப்பாட்டை அனுசரித்துக் கொண்டதனால் அவர் நெடுநேரம் பல்லுத் தீட்டவில்லை.

அவளும் தேநீர் குடியென்றாவது கேட்கவில்லை . காலைப்பசி...

எல்லாம் சேர்ந்தது ஏரில் வண்டிச் சில்லுகளின் மேல் கசந்து எரிகிறார்.

இதுகளெல்லாம் கிடந்து இடத்தை அடைச்சுப் பிடிக்குதுகள்... இதுகளைக் கட்டாயம் கொத்தி எரிக்கத்தான் வேணும்... இயந்திரங்களெண்டு வந்ததுக்குப் பிறகு இந்த மரங்களாலை பலன் இல்லாமைப் போட்டுது... இப்ப காசு இருக்கிறவங்களுக்குத்தான் கருவியளும் சொந்தம்... நானும் பொன்னரப்பாவையைப் போல பணம் நிறைய வைச்சிருந்தன் எண்டால் இரண்டு மூன்று. இறாக்ரர் வாங்கி ஊர் பிழைப்பெல்லாத்தையும் செய்வன்...

ஒவ்வொருநாளும் கோடிக்குப் பின்புறம் செல்லும் பொழுது கண்களை உறுத்தும் அந்த மான்ய காலக் கருவிகள் அவரைத் திக்குமுக்காடச் செய்வன என்று கூறுதற்கில்லை... இறாய்க்ரர் கட்டணம்... கட்டணம் செலுத்த மூலதனம்... என உழைத்து வழமைக்கு மாறாக அவர் ஆண்டு அனுபவித்த உடமை உணர்ச்சி தோன்றி அவற்றைப் பார்த்ததும் அவருடைய தந்தை முன்னுக்கு வந்து நிற்கிறார். கூடவே கோவணக்கட்டும் சரிந்த வண்டியுமாய் சகல தொழிலையும் கூட்டு பரிமாறலாகத் தந்தையுடன் செய்யும் உச்சிக் குடுமி முடிந்த தந்தையின் நண்பர் கச்சியப்பரும் வந்து நின்றார்.

அந்த மானியத்தின் பின்...

முத்தையர் குனிந்து கறையான் படைகொண்ட சில்லுகளை அங்குமிங்கும் அசைத்தபொழுது அவரின் அவள் கூப்பிடுகிறாள் போலிருக்கிறது. இல்லை அதில் ஏமாற்றம். அவள் குரலின் சாயலுள்ள இளையவள் அது...

அப்பு உன்னை வரட்டாம். ஆர் அம்மாவோ?

அவரது கோபத்தைக்கண்டு அவர் காலையில் பிரஸ்தாபித்த பிரச்சினையின் இன்றியமையாமையைச் சிந்தித்து தனது குற்ற உணர்வுடன் அக்கம் பக்கத்தில் காசு மாறித் தரலாமென்பதை மகள் மூலம் அவள் சமாதானத் தூது அனுப்பியிருக்கிறாள் என அவர் உள்ளம் சிரிப்பால் குதித்தது.

அவர்களது தாம்பத்ய வாழ்வில் - இருபது வருடமாக குழந்தைகள் பிறந்த பின் கோபதாபங்களின் சமரஸ மத்தியஸ்தங்கள் - குழந்தைகள்.

உள்ளம் தனது கோபத்தின் வெற்றியில் துள்ளிக் குதிக்க மீண்டும் கேட்கிறார் :-

கொம்மாவோ?

வயலை விதைக்க வேண்டுமென்ற தவிர்க்க முடியாத தேவையால். ரோஷம் கெடும் ஒரு தொழிலைச் செய்யும் விருப்பீனத்துடன் தொங்கலை எறிந்துகொண்டே விசுக் விசுக்கென கடன்படுவதற்காக அவர் முன்னே அவள் கோப நடை நடப்பது போலிருக்கிறது...

சாய்... என்னாலை அவள் எத்தனை வீட்டுப் படலை திறக்கவேணும்? கேட்ட உடனை இந்தாகையிலை பிடியென்றே சொல்லப் போகுதுகள்? இல்லை யெண்டும் சொல்லுங்கள்... அல்லது இரு எண்டு சொல்லி நேரத்தையும் மினக்கெடுத்துங்கள்... இதுதான் சொல்லுறது... எங்களுக்கெண்டு தொழில் செய்யக்கூடாதா கையிலை சாமான்கள் இருக்க வேணும்... இப்ப இந்த இறாய்ரர் எங்களுக்குச் சொந்தமாயில்லையெண்ட தாலை காசுக்கு அலைய வேண்டியிருக்கு... காசு குடுத்தாத் தான் எங்கடை வயல்களிலை உழவும் நடக்கும். தொழிலும் நடக்கும்...

அம்மா இல்லை...

பின்னை ஆர்...? சொல்லு கெதியா மானிடத்தின் பெலஹீனம் எதிர்பார்த்தது எதிர்பாராத தானதும் பீறிப்பாய அந்த வேகத்தில் செய்தி கொண்டு வந்த சிறுமி நடுங்கிப் போகிறாள்...

ஆர் வந்தது?

அதே வேகம் அவளும் ஒப்புவிக்கிறாள்.

எங்கடை இறாக்ரர் வைச்சிருக்கிற பொன்னப்பா வீட்டு வள்ளியமக்கை வந்து இருக்கிறா. கூட்டிக்கொண்டு வரச்சொல்லி அக்காதான் சொன்னவ... அம்மா எழும்பி எங்கேயோ எப்பவோ போயிட்டா...

என்னடி சொல்கிறாய்? வள்ளியமக்கை வந்து இருக்கிறாவோ? இந்த நேரமெண்டுதான் கொம்மாவும் போட்டா வரட்டும் சொல்லுறன்.

நெல்லுப் பயிர்களின் நடுவில் முளைத்த கிடேய்ச்சிப் புற்களை லபக்கெனப் பிடுங்கி எறிவது போன்று மூன்று - பழைய - உழவுக் காசுகள் இன்னமும் கொடுக்கப்படவில்லையென்பதால் என்ன பேசுகிறோம் எதைப் பேசுகிறோம் என்ற எந்தக் கவலைகளுமின்றி ஏசிவிட்டு. ஏசியதெல்லா வற்றையும் கேட்ட முத்தையரை அதிகாரம் கொண்டு அடக்கிய நிம்மதி தோன்ற வள்ளியம்மை அக்கை இப்பொழுது இவ்விடத்திலிருந்து போய்விடுவாள்...

ஆனால் முத்தையர்?

வள்ளியம்மை அக்கையிடம் ரூபாவைக் கொடுத்து எறிந்துவிடலாம் என்றால் வீட்டுப் பெட்டகத்தின் வெறுமை அவர் முன்வந்து நிற்கிறது...

சரி நீ போ... வாறன்.

முத்தையருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எப்படியாவது சமாதானம் சொல்லி வள்ளியம்மை அக்கையை அனுப்பி வைத்துவிட்டால் அன்று பகல் முழுக்க அலைந்தாவது அவர்களது உழவுக்காசைக் கொண்டுபோய்க் குடுத்திட வேண்டுமெனத் தீர்மானித்துக் கொள்கிறார். அவருக்கு இருந்த பசியும் போய்விடுகிறது.

இந்த வாழ்க்கையிலை பசியென்று வேறை சாப்பிடவேணுமாக்கும்... சீச்சி... மானம் மரியாதையெல்லாம் போகுது... எங்கடை வயல்... ஆனா எங்கடை வயலிலை உழவு நடக்க வேணுமெண்டால் விதைப்பு முடியவேணுமெண்டால். சூடு மிதிக்கவேணுமெண்டால் வள்ளியமக்கை ஆக்களைத்தான் கெஞ்சவும் வேண்டியிருக்கு... கையிலை காசு இருக்குமெண்டால் எடுத்ததுக்கெல்லாம் உடனுக்குடனை காசைச் சுண்டிக் சுண்டி எறிந்து கொண்டிருப்பன்.

இப்பொழுது அங்கே போனால் வள்ளியம்மையக்கை பேசுகிற பேச்சைக் கேட்கமுடியாது... மண்ணைப் புரட்டிக் கெம்பி எறிவதைப் போல அந்த மனுஷியும் கிழியக்கிழியக் கேட்கும்... ரோஷம் மானம் இல்லையென்றால் அதை அடகு வைத்த தெம்பில் என்ன அக்கை செய்வது பொறுத்ததோடு பொறு எனக் கேட்கலாம் -

மூதேசியளுக்குப் புத்தி அறுப்பு இருக்கே... அப்பு இங்கை இல்லையெண்டு பொய் சொல்லத் தெரியாது? எருமை மாதிரிக் கிடக்கிற அந்த நாய்க்கு மூளை இருந்தா ஏனிந்தப்பாடு. இருக்கிறாரெண்டு சொல்லிப்போட்டு அவை உண்மைக்கு விசுவாசியா

(7 ஆம் பக்கம் பார்க்க)



# நூல் அகம்

நூலின் பெயர் - ஓரிடம் (கவிதைத் தொகுப்பு)
எழுதியவர் - சு.க.சிந்துதாசன்
வெளியீடு - புதிய தரிசனம் (வதிரி - கரவெட்டி)
விலை 100/-

'ஓரிடம் என்ற தலைப்பில் அமைந்த கவிதைத் தொகுப்பு ஒன்று பொலிகையூர் சு.க.சிந்துதாசன் எழுதி வெளிவந்திருக்கிறது. கவிதைகள் அனைத்தும் எமது மண்ணில் இடம்பெற்ற சம்பவங்களில் ஏற்பட்ட அழுத்தங்களை வேதனையுடே சுட்டிக்காட்டியிருக்கின்றது.

சோதனை வடுக்கள் நிறைந்த வீடியமான ஊரத்தில் பிறந்த ஒரு குடும்பத்திற்கேனும் சோதனைக் காலங்களிலிருந்து விதிவிலக்காக தப்பிய வரலாறு கிடையாது. இந்தக் காலப்பகுதியில் எங்கள் மண்ணில் இடம்பெற்ற சம்பவங்களை கதையாகவும், கவிதையாகவும் சொல்ல நினைத்தால் நிறையப் பக்கம் பக்கமாக இருக்கின்றது. அனைத்தும் கடைசியில் சோகங்களில் முடியும்போதுதான் மனம் வேதனை அடைகின்றது.

எத்தனை அழிவுகள் ஏற்பட்டாலும் கடைசியில் மீண்டும் தளைப்போம் என்ற நம்பிக்கையில் கவிஞரின் கவிதைகள் இழப்பையும், அதன் மீட்பையும் பிரதிபலிக்கும் வண்ணம், உழுத மேட்டில் தான் மீண்டும் புதிய பயிர் வளமுடியும் என்று, சிதைக்கப்பட்ட ஊரில் தான் புதியதொரு சமூகம் உருவாகும் என்று காட்சியமைத்து, உருவகம் நிலைத்து நடந்ததை அப்படியே கவிதைவரிகள் மீட்டிருக்கின்றன.

ஒவ்வொரு தலைப்பில் அமைந்த ஒவ்வொரு கவிதைகளும் புறம் ஒன்று அகம் ஒன்று என்றில்லாமல் ஒன்றுக்குள்ளே இரண்டின் விளைவும் எல்லா இடமும் ஏற்படுகின்றது. எமது மண்ணில் நிகழ்ந்ததைப்போல் வேறெந்த மண்ணிலும் நிகழ்ந்திருக்க முடியாத வகையில் வித்தியாசப்படுத்தியிருக்கின்றது.

உணர்ந்தவர் அதில் வாழ்ந்தவர் என்ற சிறப்பம்சம் ஒவ்வொரு கவிதை வரிகளின் நகர்த்தலிலும் வெளிக்காட்டி நிற்கின்றது. அறியப்படுத்த, விலாசப்படுத்த எங்கள் ஊர் அழகையும், வளங்களையும் சொல்லி எடுக்கமுடியாத அலங்கோலமாக எமது மண் மழை நேரத்தில் மனம் வீசிக் காட்டுகின்றது. இன்னும் சாகவில்லை என்றபோது எமக்குள் ஒரு உணர்வு கண்டிப்பாக ஏற்படுகின்றது.

எந்தக் கஷ்டங்கள் வந்திடினும் அதனை தாங்கிக் கொண்டு அஞ்சாமல் ஒன்று சேர்ந்து முன்னேறுவோம் என்று கவிஞர் அறை கூவிநிற்பது நிறைய அழிவுகளைத் தாங்கி இன்றும் இருக்கின்றோம். எமக்கோர் விடிவுக்கான நாள் ஒன்று புலர்ந்திடாதா என்று எல்லோரும் எதிர்பார்த்திருப்பது எமது மண்ணில் மட்டும் தான்.

சாவுகளைப் பார்த்து பார்த்து மரத்துப்போன விழியானது தூக்கத்தினை மறந்து நெடுங்காலம் மாயிற்று. கவிஞர் வரியில் மேலும் வீட்டுப் படலை இன்றும் திறந்திருக்கிறது என்று முடியும் போது உணர்வையும், உள்ளத்தையும், வலியையும், சேர்த்து வைத்திருக்கின்றார்.

- உதயா -

தமிழை இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவாக்கி முத்தமிழ் என அழைத்தனர் பழந்தமிழர். இயல் என்பது இலக்கண இலக்கியங்களைக் குறிக்கும். இசை என்பது கருவி இசை, மிடற்றிசை பற்றிய நூல்களைக் குறிக்கும். நாடகம் என்பது நடிப்பு, நடனம், நாடகம் முதலியவற்றைப்பற்றிப் பேசுவது. இவ்வாறு தமிழை மூன்று பிரிவாக நோக்குவது தமிழ் மரபாக உள்ளது. இயல் என்பது மனத்தின் விளைவு என்றும், இசை என்பது எண்ணம் (மனம்) வாயின் விளைவு என்றும், நாடகம் என்பது மனம், வாய், மெய் (எண்ணம், மொழி, செயல்) ஆகியவற்றின் விளைவு என்று விளக்கம் தருவர்.

தொல்காப்பியர்காலம்முதல் இன்றுவரை இடையறாது தொடர்ந்துவரும் இலக்கிய வளமுடைய மொழி தமிழ். சங்க இலக்கியமான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்

## முத்தமிழ்ப் பாகுபாடு



பதிகாரம், மணிமேகலை, பதினெண் கீழ் கணக்கு நூல்கள், சிந்தாமணி, பெரிய புராணம், கம்பராமாயணம், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் ஆகிய தமிழின் சிறப்பினைப் பேசும் இலக்கியம், உரை நடை இலக்கியம் என இரண்டு வகைப்படுத்தலாம். செய்யுள் இலக்கியமே தமிழில் அதிகமாய் இருந்தது. ஐரோப்பியர் வருகைக்குப் பிறகே உரைநடை இலக்கியம் வளர்ச்சியையும், செல்வாக்கையும் பெற்றது. சிறுகதை, புதினம், நாடகம், புதுக்கவிதை முதலியன இன்று உரைநடை இலக்கிய வகையாகப் பயன்படுகின்றன. சங்க இலக்கியத்திலுள்ள அகப்புறக் கோட்பாடும், நீதி நூல்களில் காணப்படும் அறநெறிக் கோட்பாடும், பக்தி நூல்களில் காணப்படுகின்ற இறைநெறிக் கோட்பாடும் தமிழிலக்கியத்தின் தனித் தன்மைகளாகும்.

தமிழில் இன்றுள்ள நூல்களில் தொன்மையானதாகக் கருதப்பெறும் தொல்காப்பியமே ஓர் இலக்கணநூல். இந்த நூலுக்கு முன்பு எத்தனையோ நூல்கள், இலக்கணங்கள் இருந்திருக்கவேண்டும் என்று இதன் வாயிலாக ஊகிக்க முடிகின்றது. தொல்காப்பியர் காலத்தில் எழுத்து, சொல், பொருள் என மூவகையாக இருந்த இலக்கணம் பின் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகையாயிற்று. வீரசோழியம், நன்னூல், யாப்பலங்காரம், தண்டியலங்காரம், நம்பியகப்பொருள், புறப்பொருள், வெண்பாமாலை, இலக்கிய விளக்கம், தொன்னூல் விளக்கம் முதலிய பலவகை இலக்கண நூல்கள் தமிழில் உள்ளன. இலக்கியத்தின் பொருள், சுவை, யாப்பு, உவமை பற்றி விளக்கும் பொருள் இலக்கணம் தமிழ் மொழியில் மட்டுமே உண்டென்பர் அறிஞர். மேலும் பிற்காலத்தில் பாட்டியல் என்னும் இலக்கண நூல்களும் எழுந்தன.

திராவிட மொழிகளில் வடமொழித் தாக்குதலுக்கு மிகுதியாக உட்படாது மேம்பட்டு விளங்கும் மொழி தமிழாகும். திராவிட மொழிகளில் தமிழ் தவிர மற்றவை வடமொழியாகிய சமஸ்கிருதத்தின் உதவியின்றி வழங்கமுடியாத நிலையில் இருக்கத் தமிழ் மட்டும் இன்றும் தனித்தியங்கும் பேராற்றலைக் கொண்டு விளங்குகிறது.

## அவர்கள் அறுவடை நாட்களுக்காய்

அவர்கள் இந்த வயல்களுக்குள்
வியர்வையைச் சிந்தினார்கள்
உடல்கள் உபாதைகளை மறந்தார்கள்
வசந்தத்தின் வரவுக்காய்
விழித்திருந்தார்கள்
தென்றலின் சுகத்தில்
இன்பங்காணத் துடித்தார்கள்
தென்றல் புயலானது.
புயல்.
புதிய வடிவம் கொண்டது
அன்றுபோல் இன்று இல்லை
துன்பம் கருக் கொண்டது.

சேறழைந்த கைகளை
சப்பாத்துக்கள் அழுத்தின
போர்ப்பறையின் முழக்கம்
செவிப் பறைகளைத் தாக்கின.

இருண்ட இரவுகளில் முகம் புதைத்து
எத்தனை காலங்கள் அலைவது?
ஓர்மம் நெஞ்சை வருடியது
விழுந்தவர்கள் மீண்டும்
எழுவதுதான் வரலாறு
வாழ்வதற்காகவே போராட்டம்
அவர்கள்
தத்துவங்களுக்கு உயிரூட்ட நினைத்தார்கள்
எழுந்தார்கள்
அறுவடை நாட்களுக்காகக் காத்திருந்தார்கள்
கைகளில்
அரிவாள்களை ஏந்தி.

- முருகு பாரிமகன் -

## வீரவடு

நினைவுகளின் பதிவில்
என் நெஞ்சில் உறைந்துபோன
வாழ்வுத் தடங்களின் அனல்வீச்சு



அவனை இப்போது
எவரும் விரும்பவில்லை
தூசு படர்ந்த கோலம்

வாழ்க்கை ஓட்டத்தில்
இருளடைந்து போன
மகிழ்வின் காலம் தொலைந்து

பெருமூச்சின் வழியே
நிம்மதியின் அரவும்
இடையே இடையே

என் பார்வை அவன் மேல்
அவனோடு கலந்ததுதான்
வாழ்ப் போர்

மங்கள வாத்தியம்
வானுயர கேட்க
தங்கரதத்தில் சூரியகுமாரர்
குரல்கள் சிரிப்பொலிகள்

பின்னால் மலர்ந்த
முகங்களின் விடுதலை கோசம்
காலக் குரலோனே - வாழ்க
வீர வடுச் சுமந்து - தங்கரதம் மீது

அவன் ஏறுகிறான்
சிவப்பு மஞ்சள் கொடிகள்
அசைகிறது என் குரலும்
அவர்களோடு சேர்ந்து

-ப.பவித்ரா-

## உத்தமராவோம்

மாலை மதில்களின் மேலே - சிலர்
மந்திகள் போல் ஏறிக் குந்திடுவாரே
சாலை தனிவழி செல்லும் - நங்கை
சாயலைக் கண்களால் மாந்திடுவாரே

ஊனக் குறையிவர்க் கில்லை - தினம்
உண்ணும் உணவிற்கு ஊழியம் இல்லை
மானக் குறைவாகும் அன்றே - இவர்
மற்றவர் சோற்றினில் வாழ்ந்திடல் நன்றே.

ஆளுக்கொரு வண்டி கையில் - அதில்
அந்தரப் புத்தியோ டோடிடுகையில்
நாளுக்கொரு விபத்திங்கு - அதில்
நாய்களும் கூடவே வாங்கிது பங்கு

ஓலைக் குடிசையில் பெற்றோர் - மக்கள்
ஓடித் திரிகிறார் ஊற்றியே பெற்றோல்
வேலை இவர்களிற் கில்லை - நாட்டில்
வேண்டத் தகாதது தான் இவர் தொல்லை

மானத் தமிழர் தாம் என்று - பலர்
மாவீர காவியம் ஆகுவ தொன்று
தானம் தருமங்கள் செய்து - பிறர்
தாகம் பசியினைப் போக்குவ தொன்று

ஓர்நிலை தானிவர் கண்டு - அதில்
ஒப்பிலா நாயகர் ஆகிடல் நன்று
ஊரிவர் பண்பினைப் போற்றும் - பெரும்
உத்தமர் என்றிவர் நாமத்தை ஏற்றும்.

-நா.ரவிச்சந்திரன்-

## சிறுகதைத் தொடர்ச்சி

யிட்டினம்... போடி... போய்... அப்புவைக்காணவில்லையெண்டு சொல்லு... ஓடு... நில்லாதை.

சிலந்தி மண்டியகலப்பை தலையில் இடிக்கிறது. பழுவான இடி... ஆ... நோவைச் சகிக்கவும் முடியவில்லை.

அப்பு நான் என்ன சொல்ல...

வீட்டிலே நீங்கள் இருந்தா உருப்பட்டதுதான்... இந்தக் காலத்திலே மோனை வாழுறதுக்குப் பொய் சொல்லத்தான் வேணும். ஏழையள் பொய் சொல்லாமை நேர்மை நேர்மையெண்டு இருக்கிறதாலை அதுகளுக்கு வாழவே தெரியாமைப் போயிடுது... இயந்திர யுகத்தின் மகத்தான சாதனைகள் ஒருபுறம் இருக்கட்டும்... அதன்விளைவுகள்? அதன் தாக்கங்கள்?

- முத்தையர்களுக்குத் தெரியும்.

வெள்ளமும் வெயிலும் ஒரு பக்கத்தாலை சுரண்டி நெல்லை அழிச்சுப் போடுதுகள்... மிச்சமாவாற நெல்லு இறாக்ரர்காரனுக்குக் குடுக்க வேண்டிய செலவு காசுக்கே பத்தாது. எனக்கிருக்கிற பதினெட்டரைப் பரப்புக்கு என்னாலை ஒரு இறாக்ரர் வேண்டமுடியுமே... அட இந்த எண்ணம்கூட பைத்தியக்காரத்தனம்... இரண்டாயிரம் மூவாயிரம் குடுத்துவேண்ட நான் அதை இந்தப் பிறப்பிலைகூட உழைக்கமாட்டன்... தண்ணி இறைக்கிற ஒரு மிசின்வேண்ட நினைச்சும் வாங்கேலாமைக் கிடக்கு... எத்தனை தண்ணீர் இறைப்புக்கு கோசுக்கு கோசு பொன்னரப்பா வீட்டாருக்க மூன்று ரூபாய்படி கொடுத்திட்டன். எங்கடை யாழ்ப்பாணத்திலை பணக்காறருக்குத்தான் பணத்தோடை பணமா நாங்கள் உழைத்துக் கொண்டுவாறம்.

வள்ளியமக்கை வந்து காத்திருப்பது இடையிடையே பயம் காட்ட அவசர அவசரமாகக் கிணற்று நீரை அள்ளி முகத்தைச் சரிவரக்கூடக் கழுவாமல் வந்து சேருகிறார்.

அக்கை வந்து கனநேரமோ? உங்களுடைய நினைவு இல்லாமல் நாங்கள் இருக்கவில்லை. இப்பவும் நானும் மனுஷியும் இதைப்பற்றித்தான் கதைச்சுக்கொண்டிருந்தனாங்கள். அவ இப்ப ஒரு வீட்டுக்குக்கடன் கேட்கப் போயிருக்கிறா. பின்னேரம் கொண்டந்துதாறன். எப்ப எனக்கு வயலை உழுது தாறியள்? வெட்டிக்கான் ஊரி நிலத்தைக் கெதியிலே உழவேணும்.

அதையெல்லாம் அவரோடை வந்து பேசு... அவரும் உன்னைக் காணவேண்டுமென்று சொன்னவர்.

ஏன் அக்கை என்னத்துக்கு?

உன்ரை மகள் சொல்லவில்லையோ?

நிலத்தில் உருண்டு திரண்டு மரவெள்ளிக் கிழங்கின் தோல் சிகப்பில் அவர் முகம் சிவக்கிறது...

அது-

எணை அப்பு... நான் இனி பொன்னரப்பா வீட்டுப் பக்கம் போகமாட்டன்... சின்னப் பொடியள் வந்து மிசின் இறைப்புக்குக் கேட்டால் நாங்கள் விடமாட்டம். பெரியாக்கள் வரட்டுக்குமென்று பேசுகினம்.

இதுக்கும் மரியாதை பார்க்குதுகள். கையிலே அலுவலெண்டால் குழந்தை குட்டியளை அனுப்பக் கூடாதோ...

ஒண்டும் வந்து சொல்லவில்லை அவள்.

வள்ளியமக்கை போனதும் அவருக்குப் புகையிலைக் காரம் ஏறுகிறது.

இப்பிடியான ஆக்கினைகளுக்கை வயல் உழ வேணுமாக்கும்... செய்துமென்ன வீடு நிறைய வருமானம் வந்துகொட்டினால் பறவாயில்லை... போன வருஷமும் கதிர்வாற நேரம் பார்த்து மழையில்லாமைப் போனதாலை எல்லாம் கப்பியும் பதரும்... போன வருஷமென்ன அதுக்கு முந்தியும் அப்பிடித்தான்...! எங்களுக்கு இதுதான் நெடுக நெடுக... யாரை நோகிறது!

வள்ளியம்மை அக்கை போன சிறிது நேரத்தில் முத்தையரின் வாழ்க்கைப்பேடும் வரும் போதே முணுமுணுத்தபடி படலையைத் திறந்து உள்ளே பிரவேசிக்கிறது. உள்ளே முற்றத்தோடுள்ளபடியில் கை ஊன்றிச் சரிந்த வண்டியுடன் சமைந்துபோயிருந்த முத்தைரைக் கண்டதும் அப்பால் விலத்தி. தாண்டி உள்ளேசெல்ல முடியவில்லை.

நிற்கிறாள்.

எரிச்சலால் அகல விரிந்த முத்தையரின் பார்வையையும் முந்திக்கொண்டே முணுமுணுப்புகளும் அசட்டுத்தனமாகக் கொடுப்பில் சிந்திய நகைப்பும் ஒடுங்க அவள் கேட்கிறாள்.

ஆர் செத்ததென்று இப்படி இருக்கிறியள்?

நையாண்டலாகக் கோபத்தை மறந்தும் மறக்காத பொருளுறைய இழந்த சௌசன்யத்தைப் பிரதிஷ்டை செய்ய அவள் முயலுகிறாள்.

இந்த வங்கி இருக்குமட்டும் நீங்கள் குடிமுழுகின ஆள் மாதிரி ஏன் இருக்கவேணும்... நான்தான் யாசகத்துக்குத் திரிய எண்டு பிறந்திருக்கிறன்... இந்தாருங்கோ... காசைக் கொண்டுபோய்ப் பொன்னரப்பா வீட்டிலை குடுத்திட்டு எப்ப உழுதுதருவினம் என்று கேளுங்கோ...

முக்கிரஹணம் மறையச் சிரிப்புக் காலிக்கிறது.

என்னை மனுஷி இல்லாட்டில் நான் அலைஞ்சு நாய்படாத பாடுதான் படுவன் - மூர்க்கை மாதிரிச் சில சமயத்திலை பிடிவாதம் பிடிச்சாலும் அவளின்ரை மனம் நந்தியாவட்டம் பூத்தான்...! பாவம்... நான் கேக்கிற வசையை நினைச்சா எனக்கே சில நேரம் வெக்கமாகத்தான் இருக்கு... ஆனால் வர்ற ஆத்திரத்திலை கரைச்சலிலை... அவளைப் பேசினாத் தான் நிம்மதியாக இருக்குமாப்போலை படுகுது.

ஏன் இன்னும் யோசிக்கிறியள்?

ஒண்டுமில்லை... வள்ளியமக்கை வந்திட்டுப் போறா... பருவம் தப்பக்கு முந்தி நாளைக்கு உழுது தரச்சொல்லிக் கேட்டனான்... ஏனெண்டால் இப்பதான் ஒரு மாதிரியா மண் கட்டிகட்டியாக உதிரக்கூடிய நல்ல பருவத்திலை கிடக்கு... எங்கடை மேகங்களைச் சொல்லேலாது. மழை தேவையென்றபோது பெய்யாது. தேவையில்லையென்றால் பெய்யும்... அந்த ஊரி நிலத்திலே மூன்று நாலு நாளைக்கு மழை இல்லையென்றால் புடுதியாயிடும்... நான் வடிவாக அந்த மனுஷியெட்டை சொல்லி மண்டாடினன். நாங்கள் நினைச்ச நேரம் உழுகிறதிற்கு இயலாது என்று சொல்லிப்போட்டுது - ஓவசியர் கந்தப்புவுக்கு பனையிலை போய்த்தேங்காய் ஏத்தி வரவேணுமாம்... அதுக்குப் பிறகுதான் உழுவினமாம்...

விதைப்புப் பருவம் வந்துவிட்டால் கருவிகளுக்காக மன்றாடிக் கருவிகளின் சொந்தக்காரர்கள் நிர்ணயித்த தினத்தில் உழவேண்டியிருக்கிறது. உழுதாலும் வானம் பார்த்த அந்த நிலங்களில் வானம் வழங்குவது பொய்க்காத வரை பயிரின் குறுகுறு வளர்ச்சி கண்டு பூரிக்கிற விவசாயிக்கு அந்தப் பூரிப்பு உத்தரவாதமாக ஒருபோதும் நிலைப்பதில்லை! வானம் வரளும்... வானம் கதறும்...

வெள்ளம் வரும்

நிலங்கள் வெடிக்கும்... மழையும் அளவுக்கு மீறி வெயிலும் அளவுக்கு மீறி...

விதை நெல்லாவது அறுவடையானால் அதிர்ஷ்டம்.

நீங்கள் கொண்டுபோய்க் காசைக் குடுத்திட்டுத் தெண்டித்து எப்பிடியாவது வெள்ளென உழச்சொல்லிக் கேளுங்கோ... அதுகள் காசுக்காகப் பொய்யுஞ் சொல்லுங்கள்... ஒண்டு சொல்ல மறந்திட்டன்: ஓவசியரவையும் நாங்கள் நிலக்குத்தகைக் காசை நேரகாலத்துக்குக் குடுக்கிற தில்லையெனக் குறைப்படுகினமாம். எங்களுக்குப் பாவம் பார்த்துத்தானாம் நாங்கள் குடுக்கிற குத்தகைக் காசை வேண்டுகினம். அந்தத் தோட்ட நிலத்துக்கு எத்தனையோ பேர் ஐஞ்சு பத்து கூடத் தரலாமெண்டு குத்தகை கேட்டும் பிள்ளை குட்டிக் காரர் என எங்களைப் பாவம் பார்த்ததால் நேரகாலத்துக்குகூட குத்தகைக் காசைக் குடுக்கிறதில்லையாம்.

அப்பிடியோ...

அந்தத் தோட்ட நிலம்... அதில் வளரும் தளதள வென்ற மிளகாய்ச்செடிகள்... கத்தரிச் செடிகள்...

நிலம் இல்லை.

கருவி இல்லை.

பணம் இல்லை.

அப்பிடியானால்? பெருமூச்சுகள். பெருமூச்சுகளாய் முத்தையர் பெருமூச்சுகளாலேயே சாகிறார்.

ஊரவள் கண்டது கதைப்பாள்... நீ அதைக் கேட்டுக் கொண்டு சும்மா மனதை அலட்டாதை... ஓவசியரவை எங்களிட்டை நேரே சொன்னால் நான் சொல்லுறன்... காலமை இந்தப் பிரச்சினையாலை இண்டைக்குப் பொழுதும் போய் உச்சி வெயிலும் தலைக்கு நேரே வந்திட்டுது... பன்னிரண்டு மணி இருக்குமென்று நினைக்கிறன். காலைச் சாப்பாட்டைக் கொண்டுவா.

# தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவால் ஒரு இலட்சம் மரங்கள் நடுகைத்திட்டம்

தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவு கடந்த வருடம் தனது பத்தாவது ஆண்டுப் பூர்த்தியில் 10 லட்சம் மரங்களை நடுகை செய்துள்ளதுடன், இந்த ஆண்டுக்கு ஒரு லட்சம் மரங்களை நடுகை செய்யும் புதிய கொள்கைத்திட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த வனவள அபிவிருத்திப் பேணல் கொள்கையின் ஊடாக, இழந்த வளங்களை ஈடுசெய்வதுடன், அருகிவரும் மர இணங்களை உற்பத்திசெய்து வனச் சூழலையும், உயிரியல் சூழலையும் விருத்தி செய்ய முடியும் என்பதே இதன் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்துக்கு அமைவாக நடப்பு நிதியாண்டின் - ஐம்பசி மாதம் தொடக்கம் இந்த ஆண்டுக்கான மரநடுகையை ஆரம்பித்துள்ளது.

இந்தக் கொள்கைத் திட்டத்தைப் பிரதிபலிக்கும் வகையில், கடந்த மாதத்தில் முதற்கட்டமாக வெள்ளாங்குளம் பகுதியில் சமூக காடுவளர்ப்பு - திட்டத்தின் ஊடாக 15 ஆயிரம் வேப்பங்கன்றுகளும், மீள்வனமாக்கல் திட்டத்தின் ஊடாக அக்கராயன் 8 ஆம் கட்டைப் பகுதியில் 5 ஆயிரம் வேப்பங் கன்றுகளும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இத்துடன் கரைச்சி பிரதேச சபையின் அனுசரணையுடன், கிளிநொச்சி நகர மையப் பகுதியில் - வீதியோர மரநடுகையாக 150 மலை வேம்பங்கன்றுகளை நடுகை செய்து, பாதுகாப்புக் கூடுகளை அமைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு - வீதியில் 20 ஏக்கர் பரப்பளவில் 24,500 தேக்குகள் நடுகை செய்யப்பட்டன. வன்னிப் பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களுடன் இணைந்த மர நடுகைத் திட்டத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகளை மாவீரர் நாளை முன்னிட்டு வழங்கும் திட்டமும் அமுல்படுத்தப்பட்டது.

இதுதவிர திருகோணமலை மாவட்டத்தில்- சம்பூர் தொடக்கம் கட்டைபறிச்சான் வரையான 5 கிலோ மீற்றர் வீதிக்கு இருமருங்கும் மரநடுகை செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான அனுசரணையை சம்பூர் கிழக்கு, கட்டைபறிச்சான் கிராம அபிவிருத்தி சங்கங்கள் வழங்கி வருகின்றன.

மேலும் பாடசாலைகள் தோறும் "மாணவர்களுடனான மரநடுகைத்திட்டம் - 2004" என்ற நிகழ்வுத் திட்டமும், மூதூர் கிழக்கு ஈச்சிலம்பற்று, தம்பலகாமம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய 50 பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்காக தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவின் திருகோணமலை மாவட்டச் செயலகம் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் இந்த மாவட்டத்தில் "பிஞ்சுகளின் பிணைப்பு - 2004" மரநடுகை நிகழ்வுத்திட்டமும், பாலர் பாடசாலை சிறுவர்களை உள்ளடக்கியதாகவும், "நினைவின் நிழல் - 2004" நிகழ்வுத் திட்டத்தின் ஊடாச மாவீரர் பெற்றோர்களுக்கு பழமரக்கன்றுகள் வழங்கும் திட்டமும், மாவீரர் தினத்தையொட்டி நடைமுறைப்படுத்தப்பட்டது.

மட்டு-அம்பாறை மாவட்டங்களிலும், பாடசாலை, பொதுஇடங்கள் என்பவற்றில் தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவில் மரம் நடுகை மேற்கொள்ளவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.




## 50 பயனாளிகளுக்கு பழமரக்கன்றுகள் வழங்கல்

(இராமநாதபுரம்)

போரூட் நிறுவன நிதி உதவியுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன், 50 பயனாளிகளுக்கு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு - கடந்த திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத் திட்ட இணைப்பாளர் வே.பிரபாகரன் 50 பயனாளிகளுக்கு 100 பலா கன்றுகள், 100 மாங்கன்றுகள், 150 தேசிக்கன்றுகள் மற்றும் 250 தென்னங் கன்றுகளை வழங்கினார். (இ)

## கரும்புலி நினைவாலயத்தில் கடற்கரும்புலிகள் அஞ்சலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி பிரதேசத்தில் கடற்கரும்புலிகள் அணியினர், கரும்புலிகள் நினைவாலயத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு கடற்புலிகளின் கரும்புலி அணியினரும். கடற்புலிகள் அணியினரும் மல்லாவி அனிஞ்சியன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து அணிவகுப்பு மரியாதையுடன் அணிவகுத்து சென்று கரும்புலிகள் நினைவாலயத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

## சுகாதார சீர்கேடு நிலவுகிறது

(கிளிநொச்சி)

பளைப் பிரதேசத்தில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பதால், அந்தப் பகுதி மக்களிடையே பெரும் சுகாதார சீர்கேடு நிலவுவதாக தெரியவருகிறது.

மழைநீர் வழிந்தோடக்கூடிய பகுதிகள் யாவற்றிரும் இராணுவத்தால் அமைக்கப்பட்ட மண் அரண்களால் தடுக்கப்பட்டு இருப்பதால் அந்தப் பகுதிகளில் மழைநீர் தேங்கி நிற்கிறமைக்குரிய பிரதான காரணமாக காணப்படுகிறது. இதனால் இந்தப் பகுதிகளில் வயிற்றோட்டம், மலேரியா ஆகிய நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## தலைவரின் பிறந்த நாளில் மரநடுகை வைபவம்

(முல்லைத்தீவு)

தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தில் முல்லைத்தீவு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் மரநடுகை வைபவம் இடம் பெற்றது.

வள்ளிபுனம் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் அழகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை பாடசாலை அதிபர் மு.ஜெயகௌரி ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்பபாவலன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை மாவீரர்களின் பெற்றோர்களான ந.யோகேஸ்வரி, யோ.சந்திரா ஆகியோர் ஏற்றிவைத்தனர். மாவீரர்களின் திருவுருப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 50 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. அதிபர், மாணவர்கள் ஆகியோரால் மரக்கன்றுகள் நடப்பட்டன.

## பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவுக்கான அடிக்கல் நாட்டுவிழா

(புதுக்குடியிருப்பு)

அமெரிக்காவில் வசித்து வரும் இருதய சிகிச்சை நிபுணர் சண்சுந்தர் தலைமையிலான கல்போனியா புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன், புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் கூடிய வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டட அடிக்கல் நாட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டினார்.

இந்த நிகழ்வில் மருத்துவப் பிரிவு பொறுப்பாளர் ரேகா, பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைப் பணிப்பாளர் மனோஜ் மற்றும் வைத்தியர்கள், போராளிகள், பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அத்துடன் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, அன்றைதினம் இந்த மருத்துவமனையில் கட்டணமின்றி இலவசமாக சிகிச்சை வழங்கப்பட்டது.

# தேச விடுதலையின் ஆவணங்களை ஆதாரத்தோடு வெளிப்படுத்துவது நம் அனைவரதும் பொறுப்பு

### தமிழீழ அரும்பொருள்காப்பு நடுவப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன்

எமது தேச விடுதலையின் அத்திவாரங்களான மாவீரரின் தியாகத்தை உணர்த்தும், எமது போரியல் வரலாற்றின் வடுக்களையும், எச்சங்களையும் தாங்கியிருக்கும் நினைவுகளை நிறுவுவதன் மூலம் எமது அடுத்த சந்ததியினருக்கு வரலாற்று ஆவணங்களாக எடுத்துக்காட்டும் நினைவுக் கட்டுமானங்கள், எமது தேச விடுதலையின் ஆவணங்களை ஆதாரங்களோடு வெளிப்படுத்தும். இந்த தார்மீக பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு என்பதை உணர்ந்து பணி செய்வோம் என தமிழீழ அரும் பொருள காப்பு நடுவப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் தெரிவித்தார்.

கிளிநொச்சி நகர் மீட்புச் சமரான ஓயாத அலைகள்-2 நடவடிக்கையில் வீரச்சாவடைந்த 398 மாவீரர்களையும் நினைவுகூரும் வகையில், கிளிநொச்சி குளச்சந்தியில் தமிழீழ அரும்பொருள் காப்பகத்தால் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுத் தூபி, நில மீட்பு நினைவுக் கல்வெட்டு ஆகியவற்றின் திரைநீக்க நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில்- பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை கல்விக் கழக பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் மாவீரர் நினைவுத் தூபியை திரை நீக்கம் செய்து வைத்தார். அடுத்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அ.தனபாலசிங்கம், கிளிநொச்சி அரச சார்பற்ற இணைய தலைவர் ந.கணேசன் ஆகியோர் நில மீட்பு நினைவுக் கல்வெட்டை திரைநீக்கம் செய்து வைத்தனர். மாவீரர் படத்துக்கான மலர் மாலையை கரைச்சிப் பிரதேச செயலாளர் பொன்.நித்தியானந்தன் அணிவித்தார். அடுத்து அகவணக்கம், தலைமையுரையைத் தொடர்ந்து கலைஞருக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.



கிளிநொச்சி காக்கா கடைச் சந்தியிலிருந்து கோவிந்தன் கடை வீதியிலுள்ள மிக பிரதான பாலத்தின் இருபக்கமும் கீழ் இறங்கியுள்ளதால் பாதுகாப்பின்றி இருப்பதைப் படத்தில் காணலாம். (9)



கட்சன் வீதியிலிருந்து சந்தையடி செல்லும் வீதியின் பாலம் உடைந்திருப்பதால் அதில் மழைநீர் தேங்கி நிற்பதை படத்தில் காணலாம்.

இராமநாதபுரம் செய்தியாளர்

## வவுனியா கல்மடு மகாவித்தியாலயத்தில் 10 வகுப்புக்கள் தற்காலிக கொட்டகைகளில்

(வவுனியா)

வவுனியா கல்மடு மகாவித்தியாலயம் பல்வேறு அடிப்படை வசதிகளின்றி, பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருவதாக பாடசாலை அதிபர் கணபதிப்பிள்ளை செல்வதேவன் தெரிவித்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர தேர்வில், வவுனியா மாவட்டத்தில் இந்தப் பாடசாலை சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளது. ஆனால் இந்தப் பாடசாலையில் பத்து வகுப்புக்கள் சாதாரண கொட்டகைகளில் இயங்கி வருகின்றன.

இந்தப் பாடசாலையில் 400 மாணவர்கள் கல்வி கற்று வருவதாகவும், 23 ஆசிரியர்கள் தேவையான போதும், 16 ஆசிரியர்கள் மட்டும் பணியில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மறவன்குளம், ஈச்சங்குளம், தவசியாக்குளம், கிடாச்சூரி, கல்மடு, பூம்புகார் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களே, இந்தப் பாடசாலையில் கல்விகற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எல்லைப்புறமாக அமைந்துள்ள பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகள் தொடர்பாக பலமுறை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்ட போதும், எந்த விதமான வசதிகளும் கிடைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கஅவற்றின் ஒன்று.
திருக்குறள்

# நமது நோக்கு

## போரா....? சமாதானமா....? அரசே தீர்மானிக்க வேண்டும்!

யுத்தமா? சமாதானமா? இது அந்த மிகப்பெரும் பேரினவாதியும், தமிழின விரோதியுமான ஜே.ஆர் ஜெயவர்த்தனா இரு தசாப் தங்களின் முன்னர் தமிழ் மக்களை நோக்கி எழுப்பிய வினாவாகும். இந்த வினாவைத் தொடர்ந்து அவர் விடுத்த – தமிழருக்கு எதிரான போர்ப் பிரகடனத்தை அடுத்து மேற்கொள்ளத் தொடங்கிய இராணுவ ரீதியிலான அனியாயமானதும், மனித உரிமைகளுக்கு எதிரானதுமான போர் நடவடிக்கைகள் ஏற்படுத்திய அழிவுகளும், துயரங்களும், இழப்புக்களும், இன்னல்களும் இன்னமும் ஓயவில்லை. ஆனால் யுத்தம் ஒரு தற்காலிக ஓய்வு நிலையில் நிறுத்தப் பட்டுள்ளது.

வெறும் யுத்த ஓய்வென்பது சமாதானம் ஏற்பட்டு விட்டது என்பதற்கோ,சமாதானம் ஏற்பட்டு விடும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான சமிக்ஞையாகி உள்ளது என்பதற்கோ, அடையாளமாகி விடாது என்பதையே கடந்த மூன்றாண்டு கால போர் நிறுத்த சூழலின் யதார்த்த நிலைகள் நிரூபித்து வருகின்றன.

போர் ஓய்வும், சமாதானம் தொடர்பான பேச்சுக்கான முன்னெடுப்புக்களும், இந்த மூன்றாண்டு காலப் பகுதிக்குள் தமிழ் மக்களின் வாழ்வில் எந்தவிதமான முன்னேற்ற கரமான மாற்றத்தையும் ஏற்படுத்தி விடவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையே. சமாதானம் என்ற சொல்லைச் சாதுரியமாகப் பயன்படுத்திக் கொண்டே மூன்று ஆண்டு நெடுங்காலத்தை பேய்க்காட்டிக் கடத்தி விட்டுள்ள சிங்கள ஆட்சியாளர்கள் – தேசியரீதியில் தமிழ் மக்களையும், சர்வதேசரீதியில் சமாதானமுயற்சிகளுக்கு அனுசரணை மற்றும் ஆதரவை வழங்கி நிற்கும் உலக நாடுகளையும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றார்கள் என்றால் அது மிகையில்லை.

உண்மையில் எந்தச் சிங்கள ஆட்சியாளருக்கும் தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளில் நேர்மையாக, ஜனநாயகத் தன்மையுடன், மனித உரிமைகளை மதிக்கும் பண்புடன் அரசியல் ரீதியில், எந்தக் காலத்திலும் செயற்பட்டதாக வரலாறே கிடையாது.

இனிமேலும் அவர்களுக்கு அத்தகைய பண்பு ஏற்படும் என்ற நம்பிக்கையையும் அவர்களின் தற்போதைய செயற்பாடுகள் ஏற்படுத்துவதாகவும் இல்லை.

இனவிவகாரம் கண்ணியமான பொறுப்புணர்வுடன் சுமுகமாகத் தீர்க்கப்படாத வரைக்கும் இலங்கையில் அமைதி நிலை ஏற்படப் போவதுகிடையாது என்பது மட்டுமல்ல இலங்கை ஒரு நாடாக இருக்கப் போவதுமில்லை என்பதை பேரினவாத மேலாதிக்க சக்திகள் இன்னமும் புரிந்து கொள்ளத் தயாராக இல்லை. இது தென்னிலங்கைப் பெரும்பான்மைச் சமூகத்தவரை மிகவும் மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றது என்பதை அந்த மக்களும் தொலைநோக்கு சிந்தனையுடன் உணரத் தவறின், வரலாறு, துயரம் தரும் நிகழ்வுகளைச் சந்திக்கவேண்டியவர்களாக அவர்களை மாற்றிவிடும் என்பதே உண்மையாகும்.

தங்கள் மக்களைப் பற்றியோ, தங்களது நாட்டைப் பற்றியோ அக்கறை கொள்ளாத தலைமைகளிடம் சிங்கள மக்கள் ஆட்சி நிர்வாகத்தை ஒப்படைத்ததன் விளைவு- அவர்களுக்கு எந்தச் சுபீட்சத்தையும் தரப்போவதில்லை என்பதுடன், தங்களின் அதிகாரங்களையும், பதவிகளையும் காப்பாற்றுவதையே இலட்சியமாகக் கொண்ட அவர்கள் அதற்காக நாட்டையே அந்நிய மேலாதிக்க சக்திகளின் காலடியில் ஒப்படைக்கத் தயாராக உள்ளார்கள் என்பதையும் மிகவிரைவில் உணர்த்தவே போகிறது.

தமிழ் மக்களுடன் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து, அவர்களின் நியாய பூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்ற, அவர்களுக்குரிய உரிமைகளை அங்கீகரித்து, வழங்க மறுக்கும் வரலாற்றுத் தவறை இளைக்கப் போகும் சிங்கள ஆட்சித் தலைமைகள், சமாதான முயற்சிகளைப் புறந்தள்ளி, மீண்டும் ஓர் போர்ச் சூழலை உருவாக்கும் தீர்மானத்துடன் இயங்கி வருவதானது நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளப் போவது உறுதி.

இந்த நிலையில் சமாதானத்தை ஏற்படுத்த, நாட்டை பேரழிவிலிருந்து பாதுகாக்க அரசு என்ன முடிவை எடுக்கப் போகிறது என்ற கேள்விக்கான விடையிலேயே அனைத்தும் தங்கியுள்ளது.

தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தனது மாவீரர் நாள் உரையில் – விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில், நிபந்தனையற்ற பேச்சுக்களை காலம்தாழ்த்தாமல் அரசு ஆரம்பிக்க வேண்டும். எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமேயானால், எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதைத்தவிர வேறு வழியில்லை. என்று மிக இறுக்கமாகவும், தெளிவாகவும், உறுதியாகவும், தெரிவித்துள்ளதை அரசு கவனத்தில் கொள்வது மிகவும் அவசியமாகும்.

போரா...? சமாதானமா....? - இதனை அரசே தீர்மானிக்க வேண்டிய கட்டம் இதுவேயாகும்.

அதே கேள்வி.... ஆனால் கேட்பவர் மாறியுள்ளார். வரலாறு எப்படி மாறிவிட்டது பார்த்தீர்களா?

## நாடும் நடப்பும்




# கலைஞர்களின் திறமை வளரும் போதே அதை வெளிக் கொண்டுவர வேண்டும்

## பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவிப்பு

கலைஞர்கள் வளரும்போதே கௌரவிக்கப்பட்டு, அவர்களது திறமைகள் வெளிக்கொணரப்படவேண்டும். இதன்மூலம் கலைஞர்களின் படைப்புக்களையும், கலை வெளிப்பாடுகளையும் சமூகம் பெற்றுக்கொள்ளும்.

இவ்வாறு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் கலாசார விழாவின் இறுதிநாள் நிகழ்வில் தலைமை வகித்துப் பேசிய வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

வடமராட்சி மண் எத்தனையோ கலைஞர்களை உருவாக்கியது. சிவசம்புப் புலவர், கலைஞர் செல்லையா, பண்டிதர் வீரகத்தி, மன்னவன் கந்தப்பு போன்ற கலைஞர்கள் இந்த மண்ணில் தோன்றி மறைந்து விட்டாலும், அவர்கள் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைகள் இன்றும் நினைவில் இருக்கிறது.

கவிதைகளாக, நாவல்களாக, இலக்கியங்களாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பேராசிரியர் சிவத்தம்பி, உடுவை தில்லை நடராசா, தெணியான் போன்றவர்கள் சமகாலத்தில் படைப்புக்களால் இந்த மண்ணுக்கு பெருமைதேடித் தந்துகொண்டிருக்கிறார்கள். எமது கலாசாரப் பேரவை ஐந்து கலைஞர்களுக்கு விருதுவழங்கி கௌரவித்துள்ளது.

இந்தக்கலைஞர்கள் மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பல விருதுகளைப் பெற்றுள்ளனர். அவர்கள் இன்று சொந்த மண்ணில் எமது மக்கள் முன்னிலையில் கௌரவித்த நிகழ்வு - வாழ்விலே மறக்கமுடியாத நிகழ்வாகும் என்றார்.

இந்த விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே. சிவநேசன், எஸ். கஜேந்திரன், எம். கே. சிவாஜிலிங்கம் மற்றும் வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபைச் செயலாளர் ஏ.எம். ஜோசேப், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஆகியோரும் உரையாற்றினர். (13,17)

## மாவீரர் நினைவாலயம் கம்பர்மலையில் திறந்துவைப்பு

கம்பர்மலைச் சந்தியில் நேற்றுமுன்தினம் மாவீரர் நினைவாலயமொன்று திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. இதில் முதல் மாவீரர் லெப்.சங்கர், கப்டன் பண்டிதர், வீரவேங்கை மகான், வீரவேங்கை குட்டி மனோஜ், கப்டன் கனோஜி அம்மான், லெப்.நித்திலா, வீரவேங்கை ஜெயா ஆகியோரின் திருவுருவப் படங்களே திரைநீக்கம் செய்யபபட்டன.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் பணிமனையைச் சேர்ந்த இனியவன் ஏற்றிவைக்க, முதல் மாவீரர் லெப்.சங்கரின் நினைவுக்கல்லை கரவெட்டிப் பிரதேசப் பொறுப்பாளர் கருணா திரைநீக்கம் செய்தார். மலர்மாலையைத் துயிலும் இல்லப பொறுப்பாளர் தமிழரசன் அணிவித்தார்.

அதைத் தொடர்ந்து மாவீரர்களின் நினைவாலயத்தை நாடாவெட்டி கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கண்ணதாசன் திறந்து வைக்க, மாவீரர்களின் திருவுருவப் படங்களை அவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் திறந்துவைத்து விளக்கேற்றினர்.

அதைத் தொடர்ந்து பொதுமக்கள் மலர்மாலைகள், மலர்கள சூடி வணங்கினர்.

இதன் தலைமையுரையை கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத தலைவர் வி.சுமதீஸ்வரன் நிகழ்த்த, நினைவுரைகளை கடற்புலிகளின் தளபதி காதர் மற்றும் தூயவன், அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர். அதைத் தொடர்ந்து பொதுமக்களின் கவிதையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது. (12)

## நாடாளுமன்ற உணவுச்சாலைக்கு வருவோரின் தொகை குறைந்துள்ளது

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உணவு விலைகள் நூற்றுக்கு நூறுவீதம் அதிகரிக்கப்பட்டதையடுத்து, நாடாளுமன்ற உணவுச்சாலையில் உணவு உண்போரின் தொகை ஒருவார காலத்துக்குள்ளேயே நூற்றுக்கு 50 வீதமாகக் குறைவடைந்துள்ளதாக நாடாளுமன்ற உணவுச் சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த வருடங்களில் நாடாளுமன்றத்தில் விவாதங்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் எம்.பிமார்கள் தமது உறவினர்கள் மற்றும் தமக்கு வாக்களித்தவர்கள் என, நூற்றுக்கும் மேற்பட்டோரை அழைத்துவந்து உணவு மற்றும் பானங்களை மலிவான விலையில் பெற்றுக் கொடுத்தனர்.

ஆனால், தற்போது இந்த விலையேற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள், தமது சம்பளத்தைப் பாதுகாக்கும்வகையில் நாடாளுமன்ற உணவுச்சாலையில் உணவு உண்பதைத் தவிர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# சமாதான முன்னோடிக் கிராமமாக கப்பூதூர் கிராமம் தெரிவு!

(கரவெட்டி)

கரவெட்டி கப்பூதூர் கிராமத்தை இனவிவகார அரசியல் மறுசீரமைப்பு, தேசிய நல்லிணக்க அமைச்சு சமாதான முன்னோடிக் கிராமமாகத் தெரிவுசெய்துள்ளது.

அண்மையில் இந்தப் பகுதிக்கு விஜயம் செய்த திட்டப்பணிப்பாளர் பேராசிரியர் லக்சறி பெர்னாண்டோ, திட்ட இணைப்பாளர் மாலினி, அமைச்சு அதிகாரிகள் முன்னிலையில் இந்தக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட திட்டப் பணிப்பாளர் நூல் நிலையம் கட்டிக் கொடுப்பதற்கான முழுப் பொறுப்பையும், தாம் மேற்கொள்வதாகவும், பாடசாலைக் கட்டடம் அமைப்பதற்கு வேறு நிதி மூலகங்கள் மூலம் செயற்படுத்த முயற்சியெடுப்பதாகவும், வீதி அமைப்புப் பணிக்கு உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவிபெற்றுக் கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து கப்பூதூர் கிராமத்தை சமாதான முன்னோடிக் கிராமமாக பிரகடனம் செய்ததுடன், அந்தப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேவைகளை இனங்கண்டு முன்மொழிவுகளை அனுப்புமாறு அமைச்சின் திட்டப்பணிப்பாளர் கோரியுள்ளார்.

இதனையடுத்து கரவெட்டி பிரதேச செயலக அதிகாரிகள் இந்த கிராமத்துக்கு சென்று அங்கு முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்களை ஆராய்ந்தனர்.

இந்தப் பகுதி மாணவர்கள் கல்வி கற்பதற்கு வசதியாக கப்பூதூர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நீண்ட கட்டடம் ஒன்றை அமைப்பதற்கும், இந்தப் பிரதேசத்துக்கு பொதுநூலகம் ஒன்றை அமைப்பதற்கும், குயிலங்கண்டு வீதியை அமைப்பது என்ற தீர்மானத்துடன் திட்டவரைபையும் அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ளனர். (13)

சர்வதேச அரசியல்

கே.ரீ.கணேசலிங்கம்

# ஜனாதிபதியின் ஈரானிய விஜயம் ஏற்படுத்தும் அரசியல் அதிர்வுகள்





இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிங்கள அரசியல் தலைமைகளின் ராஜதந்திர அரசியல் நகர்வுகள் காலத்துக்குக் காலம் நிகழ்தத் தவறுவதில்லை. அதில் அதிகமான பங்கை ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பினரே மேற்கொண்டு வந்தாலும், கட்சி வேறுபாடற்ற ஆலோசகர்களாலும், சந்திரிகா குமாரதுங்காவாலும் அவ்வாறான நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுவது கவனத்துக்குரியதாகும்.

தமிழ்த் தரப்பின் அணுகுமுறைக்கு நிகராக காணப்படாது விட்டாலும், தனது பங்குக்கு அதிகாரத் தலைமையால் சில சாத்தியப்பாடுள்ள அம்சங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஈரான் நாட்டுக்கு இலங்கை ஜனாதிபதி மேற்கொண்ட விஜயத்தின் அரசியல் தந்திரத்தைப் பரிசீலிப்போம்.

ஈரானுக்கு அரசமுறை பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிகமான நன்மைகளைப் பெற்று வந்ததாக அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர். அந்த நாட்டுத் தலைமையோடு, வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான உடன்பாட்டில் ஜனாதிபதி கைச்சாத்திட்டதுடன், அரசியல்ரீதியான கூட்டுறவுக்கும் வழிவகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் இங்கு ஆராயப்படவுள்ள விடயம் - ஏன் ஜனாதிபதி ஈரானுக்குச் சென்றார் என்பதாகும். வெளிப்படையாகப் பார்த்தால், ஜனாதிபதி ஈரானுக்குப் போவதற்கு பல வாரங்களாகத் திட்டமிட்டிருந்தார். ஏன் இந்திய விஜயத்துக்கு முன்பே ஈரானுக்கு விஜயம் செய்ய ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார் எனக் கூறப்படுகிறது. இதற்குப் பதிலளிக்க - இலங்கையின் தற்போதைய பிராந்திய சர்வதேச அரசியல் வலைப்பின்னலைச் சற்று அவதானிப்போம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் - ஜே.வி.பி கூட்டணி ஆட்சியைப் பிடிப்பதற்கு பிராந்திய சக்தியான இந்தியாவே காரணம். அதாவது மேற்கின் பலத்துடன் ஆட்சியைத் தக்க வைத்திருந்த ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை முறித்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைப் பிடித்தது - ஒருவகையில் பார்த்தால் அமெரிக்கர்கள் தோற்கடிக்கப்பட்டு இந்தியர்கள் இலங்கையில் ஆட்சிக்கு வந்துள்ளனர் என்பதாகும்.

இதனை எல்லாம் சகித்துக் கொண்ட அமெரிக்கா - புதிய அரசாங்கத்துடன் உறவைப் பேண விரும்பியது. புரிந்துணர்வுடனான உறவை உருவாக்கினால்,



அமெரிக்காவின் நலன்க்ள் முழுமையாக பாதிக்காது என்க் கணக்குப் போட்டு சில நகர்வுகளை செய்தது.

குறிப்பாக இலங்கை விடயத்தில் அமெரிக்க ராஜாங்க பிரதிச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் பல தடவை பல அறிக்கைகளை வெளியிட்டு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தை சமாதான வழிமுறைக்குள் இழுக்க விரும்பினார்.

அதாவது அமெரிக்கா வகுத்த சமாதான வழிமுறைக்குள் - இழுக்க திட்டமிட்டார். ஜனாதிபதி புஷ் மீண்டும் பதவிக்கு வந்த சமயம் இலங்கை - இந்தியப் பாதுகாப்பு உடன்பாடு கைச்சாத்தாகவிருந்தது. அப்போது சந்திரிகா இந்தியா செல்லத் திட்டமிட்டதும் அதனைத் தடுத்து நிறுத்த ராஜீக முயற்சி ஒன்றை ஆர்மிரேஜ் மேற்கொள்ள இருந்தமையும், அது சாத்தியப்படாத போது ஆர்மிரேஜின் இலங்கை வருகை ரத்தானதும் தெரிந்தவையே.

ஆர்மிரேஜின் இலங்கை வருகை ரத்தானது என்பதால் அமெரிக்கா - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தைத் தனது வலைக்குள் போடுவதைக் கைவிட்டுவிட்டதல்ல, ஜனாதிபதியையும் அவரது கூட்டணியினரையும் திட்டமிட்டு - அமெரிக்க செல்வாக்குக்குள் கொண்டுவர எடுத்த இன்னோர் முயற்சியாகவே, பாகிஸ்தான் பிரதமரின் வருகை அமைந்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமரை கட்டுநாயக்காவிலிருந்து ஜனாதிபதி மாளிகைவரையும் எப்படிப் புதிய அரசாங்கத்தினர் வரவேற்றனர் என்பதைப் பார்ப்போமாயின் - அவரது விஜயத்தின் வலிமையை புரியலாம். அல்லது அவரது வருகையை இலங்கை ராஜதந்திர வட்டாரங்கள் எப்படிக் கையாண்டன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பாகிஸ்தான் பிரதமர் சார்க் அமைப்பு சார்ந்த விஜயத்தை மேற்கொண்டாலும், அவரது வருகையிலேயே அமெரிக்க - இலங்கை உறவு தங்கியிருந்தது. குறிப்பாக இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்பாட்டை மேற்கொள்ளத் திட்ட மிட்டுக்கொண்டிருக்கும்போது - பாகிஸ்தான் இலங்கைக்கு ஆயுதம் வழங்குகின்றமை - இந்தியத் தரப்புக்கு, இலங்கைத் தரப்பினர் செருப்பால் ஓங்கி அறைந்ததற்கு சமமானதாகும்.

இந்தியர்களின் பாரம்பரிய விரோதிகளை இலங்கையர் நெருக்கமான நண்பர்களாக்கியமை, இந்தியத்தரப்பின் அதிகமான தலையீடுகளையும், உடன்பாட்டில் அதிக அழுத்தங்களையும் தவிர்க்கவே இலங்கைத் தரப்பு இப்படி நடந்து கொண்டிருக்கின்றதெனக் கூறினாலும், இலங்கைத் தரப்பினால் அதிக முடிவுகளை சுயாதீனமாக எடுக்க முடியுமென்பதையும் இலங்கைத் தரப்பினர் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

இவ்வாறு பாகிஸ்தான் தரப்பு இந்தியர்களுடன் சமாதான உரையாடலை நிகழ்த்தும் காலப்பகுதியில், சுயாதீனமாக நடந்து கொள்வதென்பது கடினமான அரசியலாகவே அமையும். அதனாலேயே அமெரிக்கத் தரப்பின் செலவாக்கும், நலன்களும் பாகிஸ்தானின் நடவடிக்கையில் அமைந்திருந்தது.

இலங்கைத் தரப்பு ஆயுதத்துக்காகவே இந்தியாவுடன் உடன்பாடு செய்வதாக அமெரிக்கா கருதியுள்ளது. இதனால் - நேரடியாக அன்றி மறைமுகமாகச் சாத்தியப்படுத்தினால் பாதுகாப்பு உடன்படிக்கையின் அதீத செல்வாக்கைத் தவிர்ப்பதுடன், இந்தியாவின் அதிக பிரசன்னம் இலங்கையில் குறையுமென அமெரிக்கா கருதுகிறது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்தியாவின் இலங்கை மீதான அதிக தலையீடு, அதிக ஆபத்துக்களை தனக்கு ஏற்படுத்தி விடுமென்பதுடன்,

இலங்கை - இந்திய பாதுகாப்பு உடன்பாட்டை முற்றாக நிறுத்துவது என்பதை விட, இந்தியத் தரப்பின் கைகள் ஓங்காது பாதுகாத்துக் கொள்வதே அமெரிக்கத் தரப்பின் திட்டமுமாகும்.

எனவே பாகிஸ்தானை முன்நிறுத்தி அமெரிக்கர்களும், இலங்கையர்களும் அதிக நன்மைகளை அடைந்துள்ளனர் என்பது இதனூடாகத் தெரியவரும் அரசியலாகும். இதன்மூலம் இந்தியத்தரப்பு பாரிய நெருக்கடிக்குள் மாட்டியுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா புத்திசாதுரியமாக இலங்கைத் தரப்பின் நலன்களைப் பாதுகாத்துள்ளார். அப்படியாயின் இலங்கையின் தற்போதைய ஆட்சியினர் அமெரிக்காவுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி விட்டனரா? அல்லது ஏற்படுத்த விரும்புகின்றனரா? என்பதே தற்போதைய கேள்வியாகும்.

உண்மையில் அமெரிக்க எதிர்ப்பு வாதிகளான இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்கள் அமெரிக்காவை வைத்து, தமது பிராந்திய அரசியல் அடைவை சாத்தியப்படுத்திவிட்டனர். இது இலங்கையரது ராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றியாகும். உண்மையில் ஜனாதிபதி குமாரதுங்க விரும்பினால் கூட அவரது ஆட்சியில் பிரசன்னமாயிருக்கும் ஜே.வி.பியினர் அமெரிக்க நெருக்கத்தை விரும்பமாட்டார்கள். ஆட்சியைத் தக்கவைக்கும் ஜனாதிபதி இதற்கான சூழலை தவிர்க்கவே விரும்புகின்றதை மேலும்நிறுவ முயன்றுள்ளமையே ஈரான் நாட்டுக்கான விஜயம்.

ஈரான் - அமெரிக்காவின் இன்னோர் எதிர்நாடு சதாமுக்குப் பினபு இலக்குவைக்கப்பட்டுள்ள அடுத்த நாடுகள் பட்டியலில் ஈரான் முக்கியமான இடத்திலுள்ளது.

இந்திய - ஈரானிய நெருக்கம் மிக நீண்டகாலமாகக் காணப்படும் அரசியல் உறவாகும் இதனால் ஈரானுக்கு - இலங்கை ஜனாதிபதி செல்வதென்பது அமெரிக்காவுக்கு எரிச்சலான செயலாகவே அமைந்திருக்கும்.

நிச்சயமாக அமெரிக்காவின் செய்தியோடு சந்திரிகா ஈரான் செல்லவில்லை. ஈரானுக்கு சென்றதன் வாயிலாக அமெரிக்காவுடன் இலங்கை அரசுக்கு நெருக்கம் இல்லை என்பதைக் காட்டியுள்ளார்.

பாகிஸ்தானின் வருகையை நன்கு பயன்படுத்திக் கொண்ட ஜனாதிபதி, அதனைப்போல் ஈரானுக்கு விஜயம் செய்ததன் மூலம் அமெரிக்காவுக்கு தண்ணி காட்டியுள்ளார். இதனால் இந்தியத் தரப்பு நிம்மதி அடையலாம் என்பதல்ல முடிவு.

மாறாக இரண்டு தரப்பையும் கையாளும் அரசியல் தந்திரத்தில் ஜனாதிபதி ஈடுபடத் தொடங்கிவிட்டார் என்பதே இதன் மறுவடிவமாகும்.

அதனால் இரண்டு தரப்புமே விழிப்புடன் இந்த அரசாங்கத்துடன் நடந்துகொள்ளும் நிலையை ஜனாதிபதி ஏற்படுத்தியுள்ளார். இந்தியர்களை ஓர் எல்லைக்கு மேல் இலங்கை விடயத்தில் தலையிடாது தவிர்த்ததுடன், அமெரிக்கர்களின் பிரசன்னத்தையும் தடுத்து நிறுத்தியுள்ளார்.

ஈரானுக்கு அவர் மேற்கொண்ட விஜயம் மட்டுமன்றி ஈரானிலுள்ள முன்னாள் அமெரிக்கத் தீவிர எதிர்ப்பு ஆட்சியாளர்களையும் கண்டு உரையாடி உள்ளார்.

ஜனாதிபதியின் இந்தத் தந்திரமானது அமெரிக்க எதிர்ப்புவாதி என்பதை - இந்தியத் தரப்புக்கு காட்டியதன் மூலம் பிராந்திய மட்டத்திலான சமவலுவுடைய அரசுகள் என்பதையும் மறைமுகமாகக் காட்டியுள்ளது.

சமமான வலுவுடைய சுமுகத் தன்மையை அரசுக்குள் சாத்தியமானதாக இந்தியத் தரப்பு ஏற்றுக் கொள்ளுமாயின், இலங்கை வேறு அரசுகளை நோக்கித் தனது உறவை பாரியளவில் விஸ்தரிக்காதென்பதையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

எனவே இந்தியா, இலங்கை, அமெரிக்கா, பாகிஸ்தான், ஈரான் என்ற இந்த அரசியல் சதுரங்கத்துக்குள் ஊசலாடிக் கொண்டிருக்கும் ராஜதந்திர நகர்வுகள் பாதுகாப்பான உறவுநிலைக்கான ஆரம்பமாகவே உள்ளது.

இந்த வகையிலான நகர்வுகள் இலங்கைத் தரப்பு இனப் பிரச்சினையை எப்படி நீண்ட சாதுரியமான, பகைமையில்லாத அரசியலாக மாற்ற விரும்புகின்றதென்பதை கோடிட்டுக் காட்டப் போதுமானது.

ஒரு பாரிய இராஜதந்திர நகர்வுக்கு இலங்கைத் தரப்பு தயாராகிக்கொண்டிருக்கிறது. அதனைப் புரிந்துகொண்டு அரசியலை நகர்த்துவது உள்நாட்டிலும், பிராந்திய சர்வதேச மட்டத்திலும் பாதுகாப்பானதாக அமையும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குமாரதுங்கவின் நகர்விலிருந்து காணப்படும் பலவீனத்தையும் சுட்டிக் காட்டுதல் வேண்டும். குமாரதுங்க பிராந்திய சக்திக்கும், சர்வதேச சக்திக்கும் தண்ணி காட்ட முயற்சித்து, இறுதியில் தண்ணியற்ற அரசியலுக்குள் மூழ்கிப் போவதாக அமைந்துவிடும்.

ஏதாவது ஒரு சக்தியிடம் சாருதல் என்பது தவிர்க்க முடியாத நிலையாக இருந்தாலும், இலங்கை புவியியல் அமைப்பின் மையத்தில் உள்ளது.

அதனால் புவிசார் அரசியலைப் புரிந்து செயற்பட்டால் மட்டுமே, இரண்டு தரப்பையும் சமாளிக்கலாம். அல்லது ஒரு தரப்பு இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான இன்னோர் தரப்புடன் கூட்டுச் சேர்ந்துவிடும். இத்தகைய முயற்சி எப்போதும் சாத்தியப்படாது எனக் கூறிவிட முடியாது.

இந்த முயற்சி இதுவரை சாத்தியப்படவில்லை என்பதற்காக, இனியும் சாத்தியப்படாது என்பது அர்த்தமல்ல. எனவே குமாரதுங்கவின் நகர்வு ஆபத்தானது. ஒரு பக்கம் வெற்றிபோல் தெரிந்தாலும், மறுபக்கம் அதிக ஆபத்தைக் கொண்டது.

காரணம் இலங்கை அபிவிருத்தியடைந்த நாடு அல்ல. அதன் அரசியல் மட்டுமன்றி, பொருளாதார இராணுவத்தேவைகளுடனும் தங்கியிருக்கின்ற நாடு என்ற வகையில் நாம் அளவீடு செய்தல் வேண்டும்.

எனவே, ஈரானிய விஜயம் உணர்த்தும் அரசியல் - ஜனாதிபதிக்கும் அவரது அரசாங்கத்துக்கும் மட்டும் உரிய நலனல்ல. இலங்கை முழுமைக்குமான நலன் என்பதைப் பொறுத்தே அதன் வெற்றி, தேல்வி அமையவுள்ளது. ❑

# தலைவர் பிரபாகரன் போருக்குத்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான்தான் போய் தலைவரின்ரை அனுமதியோட நோர்வேயில போய்ச் சொல்லுறன்.

சரி இந்த இடைக்காலத் தீர்வுத் திட்டத்தையாவது பேசித் தீர்ப்பமெண்டு. அதுக்கு அம்மா, இடைக்கால நிர்வாகத்தைப் பற்றிப் பேசுறதெண்டு சொன்னால் அதுக்கொரு பிரச்சினை.

என்னெண்டால் அங்கு ஜே.வி.பி. இருக்குது. ஜே.வி.பி எண்டால் ஒருவிதமான தீவிர மதவ தம் - தீவிர இனவாதம் - கம்யூனிசம் - இப்படி குழறுபடியான சித்தாந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒரு குழறுபடியான இனவாதக் கட்சி.

அவங்கள் சொல்லுறாங்கள் - அம்மாவுக்கு. புலிகளோட பேசாதை, இடைக்கால நிர்வாகத் திட்டம் பற்றிப் பேசாதை. நீ பேசினால் நாங்கள் உன்னை விட்டுட்டுப் போயிடுவம்.

இதுதான் அங்குள்ள யதார்த்தம் - இதுதான் அங்குள்ள பிரச்சினை. அம்மாவுக்கொரு சிக்கல், என்னவெண்டு சொன்னால் புலிகளோடை பேசித்தான் ஆகவேண்டும். ஏன் பேசவேணும்?

உலக நாடுகள், உதவி வழங்கும் நாடுகள் ஏகப்பட்ட நிதியுதவி வைத்துக் கொண்டு சொல்லுகின்றன - நீங்கள் யுத்தத்துக்குப் போகேலாது. புலிகளோடை சமாதானப் பேச்சுக்குப் போய் சமாதான வழியிலை ஒரு தீர்வைக் காணச்சொல்கின்றன.

அப்படியான சமாதான வழிமுறையில போனாத்தான் நாங்கள் உறுதியளித்த இந்தப் பெருந்தொகையான பண உதவியைத் தருவம். இல்லையெண்டா ஒரு சதமும் தரமாட்டம் எண்டு சொல்லியிருக்கின்றன. அப்படியான ஒரு நிர்ப்பந்தம் அம்மாவுக்கு இருக்கு.

அடுத்ததாக தான் ஒரு சமாதான தேவதை. தமிழ் மக்களின்ரை பிரச்சினையைத் தீர்க்கிறதுக்குத்தான் உண்மையான முயற்சி செய்யிறன் என்று ஐ.நா. சபையில போய் பேசியிருக்கிறா. அமெரிக்காவிலை போய் பேசியிருக்கிறா.

இந்தியா, கடைசியா ஈரானுக்கும் போயிருக்கிறா. சரி - அம்மா போய் ஒரு சமாதான வேடம் போட்டுக்கொண்டு திரியுறா. அடுத்தாக அவவுக்குத் தெரியும் - நாடு பெரியதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிப் போயிருக்கு.

இப்படியான பல முறைகளில் தோன்றியுள்ள நெருக்கடியைத் தீர்க்கிறதுக்கு புலிகளோட பேச வேண்டும்.

ஆனா பேசுறதுக்கு இந்த கம்யூனிச பிசாசுகள் விடுகுதில்லை. அப்ப என்ன செய்யிறது. வேறு வழியொண்டு கண்டுபிடிச்சிருக்கிறார்.

என்னெண்டால் - இடைக்கால நிர்வாகத்தோடை சேர்ந்து நிரந்தரத் தீர்வு பற்றியும் பேசவேண்டும். அதென்ன விந்தையானதொரு நிபந்தனை. நாங்கள் ஒரு இடைக்கால நிர்வாகத்தையாவது தா. கொஞ்சக் காசை எடுத்து எங்கட சனத்துக்குக் கொடுப்பம் என்றுதான் வெளிக்கிட்டது.

நீ வந்து உன்ரை மடியுக்குள்ள உன்ரை இனவாத சக்திகள், தீவிரவாத சக்திகளையெல்லாம் வைத்துக் கொண்டு ஒரு உருப்படியான கொள்கைத் திட்டமும் இல்லை.

தமிழருக்கு விரோதமான சக்திகளை வைத்துக்கொண்டு வாருங்கள் இனப்பிரச்சினை பற்றி பேசுவமெண்டால் - நாங்கள் என்ன விசரங்களே.

தலைவரே பல காரணங்களைக் காட்டிச் சொல்கிறார் - இடைக்காலத் தீர்வை விட்டுட்டு நிரந்தரத் தீர்வுக்கு ஏன் வாறா எண்டு.

ஒன்று இவவின்ரை கூட்டணிக்குள்ள இருக்கிற கம்யூனிச இனவாத சக்தியான ஜே.வி.பியைத் திருப்திப்படுத்த வேணும், இல்லாட்டி அவன் விட்டிட்டு ஓடிவிடுவான்.

மற்றது - இனப்பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு நேர்மையான அணுகுமுறையோட தீர்க்கிறதெண்டு சர்வதேச சமூகத்துக்குக் காட்ட வேணும்.

மற்றது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எண்டு போய் பேச்சை இன்னமும் நீண்ட காலத்துக்கு இழுத்தடிக்கலாம், உலகத் திட்டயிருந்து நிதியைப் பெறலாம்.

ஆனால், உண்மையென்ன வெணடால் - ஒரு இடைக்காலத்தையோ நிரந்தரத் தீர்வையோ கொடுக்கிற யோசனையில்லை. தலைவர் மூன்று காரணத்தைச் சொல்லுறார்.

நான் ஒரு நாலாவது காரணமும் சொல்லுறன். அதாவது அம்மா 2000 ஆம் ஆண்டு ஒரு அரசியல் சீர்திருத்தத் திட்டமொன்று வைச்சிருந்தவ. அதைத்தான் நான் அடிக்கடி சொல்லுறன் - அம்மாட்டை ஒரு பொக்கிஷம் இருக்கெண்டு. பெட்டகம் - இதைப்பற்றிப் பேசுவதற்குத்தான் ஒரு திட்டம் வைச்சிருக்கிறா.

ஏனெண்டு சொன்னால் இதைப் பற்றிப் பேசினால் அரசியல் யாப்பிலை ஒரு திருத்தம் கொண்டு வந்து - ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கலைச்சு, ஒரு வெஸ்ட் மினிஸ்டர் மொடல் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கொண்டுவந்து மீண்டும் தான் அரச தலைவியாக- பிரதம மந்திரியாக வர்றதுக்கான திட்டமொண்டும் அவவிட்டை இருக்கு. அதைப் பகிரங்கமாகச் சொல்லமாட்டா.

தலைவர் தனது அறிக்கையில்- நாங்கள் ஏன் ஒரு இடைக்கால நிர்வாக அலகுத்திட்டத்தைக் கேக்கிறம் எண்டு சொல்லுறார். அவர் நாட்டிலுள்ள யதார்த்த நிலையை அழகாச் சொல்கிறார்.

அங்க நானும் போய்ப் பார்த்தனான். அங்க பயங்கர மழை, பயங்கர வெள்ளம். பாலங்களெல்லாம் இடிஞ்சுபோய்க் கிடக்கு, நுளம்புப் பிரச்சினை, சனங்களெல்லாம் பெரிய அவதி. பரந்தனில இருந்து விசுவமடுவுக்குப் போற றோட்டில் மூன்று பாலங்கள் கவிண்டு போய்க்கிடக்கு.

நான் விசுவமடுவுக்குப் போகாமல் திரும்பி வந்தன். அவ்வளவு மழை, வெள்ளம். பயிரெல்லாம் அழிஞ்சு, வெள்ளக்காடாக் கிடக்கு. சனம் பெரிய அவதிப்பட்டுக் கொண்டிருக்கு.

அங்க யாழ்ப்பாணத்தில பார்க்கப்போனால், பல்லாயிரக்கணக்கான அகதிகள் - இதுக்குள் இராணுவம் சனத்தை மாவீரர் தினத்தைக் கொண்டாடமுடியாமல் சனங்களைப் போட்டு அடிக்குது.

நாங்கள் அங்க வன்னியில மக்கள் படுற அவதியைப் பார்த்திருக்கிறம். யாழ்ப்பாணத்தில அகதி முகாம்களில தொடர்ந்தும் எங்கட மக்கள், தங்கட சொந்தக் கிராமங்களுக்கு, வீடுகளுக்குத் திரும்ப முடியாமல் இருக்கு.

இதுக்கிடையில இராணுவ அட்டகாசம். மற்றது இராணுவம் வந்து மக்களுக்கு அடிச்சுத் துன்புறுத்தி அவர்கள் ஆஸ்பத்திரியில் இருக்கினம். இவங்கள் என்ன செய்யுறாங்கள் பொடியள்.

இனியும் பொறுத்தது காணும்- அப்படியானதொரு போருக்கான சூழ்நிலை. மக்கள் கொதிச்சுக் கொண்டிருக்கிறார்கள். அப்ப அதுதான் தலைவர் சொல்கிறார்- நாங்கள் இடைக்கால நிர்வாகம் கேட்டதுக்கு காரணம் எங்கட மக்களின்ரை அவலநிலையைத் தீர்ப்பதற்கெண்டு.

ஆனால், சந்திரிகா நிரந்தரத் தீர்வைப் பற்றி பேசுவமெண்டு சொல்லுறா. அப்ப நாங்கள் உங்களெல்லாருக்கும் தெரியும். நீண்ட காலம் யாழ்ப்பாணத்தில இருந்து பழைய அரசியலெல்லாம் படிச்சிட்டுவந்த கன பெரியவர்கள் எல்லாம் இஞ்சை இருக்கினம்.

என்னைவிட அவையளுக்கு கூடத்தெரியும். அவையள் பட்ட கஷ்டங்கள், எதைப் பற்றி ஐயா நாங்கள் பேசேல்லை. கடந்த 50 ஆண்டுகளாக சம உரிமையைப் பற்றிக் கேட்டம். மொழி உரிமை பற்றி கேட்டம்.

பிரதேச சுயாட்சி, சமஷ்டி, சமஷ்டியைப் பற்றி 50 வருசத்துக்கு முதலே தொடங்கிட்டம். சமஷ்டிப் பிரச்சினை புதுசில்லை.

பழைய பிரச்சினை. இப்பதான் சிங்களவர் புதுசா என்னவோ பாலசிங்கம் உள்ளகமோ வெளியகமோ எண்டு சொல்லிப் போட்டார் எண்டு குழம்பிப் போயிருக்கினம். அது வேற விசயம்.

ஆனால், தலைவர் சொல்லுறார் - என்னெண்டு சொன்னால் காலங்காலமாக நாங்கள் சிங்களவரோட பேசியிருக்கிறம் - சிங்களவரோட ஒப்பந்தம் செய்திருக்கிறம், உடன்பாடு செய்திருக்கிறம்.

இந்த உடன்பாடுகள், ஒப்பந்தங்களெல்லாம் கிழித்தெறியப்பட்டிருக்கு. அப்ப இப்படியான ஒரு ஏமாற்றப்பட்ட - வஞ்சிக்கப்பட்ட வரலாற்றில் நாங்கள் திரும்பவும் நடக்கத் தயாரில்லை, புலிகள் இதுக்குள்ள போகத் தயாரில்லை. அது பழம்பரம்பரையோடு போச்சு.

இப்ப நாங்கள் வந்து ஒரு அரசியல் கட்சி இல்லை. முந்தின சமஷ்டிக் கட்சி மாதிரியோ, கூட்டணி மாதிரியோ இல்லை - சிங்களவரிட்டைக் கையேந்திக்கொண்டு நிக்கிறதுக்கு.

நாங்கள் ஏற்கனவே ஒரு அரசை நிறுவியிருக்கிறம். எங்களுக்கொரு அரசு இருக்கு. எங்களுக்கு ஒரு சிங்கள இராணுவத்துக்கு சமவலுவான ஒரு இராணுவம் இருக்கு. கடற்படை இருக்கு- பொலிஸ் நிர்வாகம் இருக்கு, நீதி நிர்வாகம் இருக்கு. ஒரு அரசுக்கு உள்ள சகல கட்டுமானங்களும் எங்களிட்ட இருக்கு.

நாங்கள் ஒரு அரசை நடத்திக் கொண்டிருக்கிறம். சிங்களவன் நினைக்கிறான் என்னவோ பிரபாகரனும், பாலசிங்கமும் என்ன இடைக்காலத் தீர்வுக்கு போய் நிக்கினம் எண்டு.

நாங்கள் ஒரு நிரந்தர அரசை வைத்திருக்கிறம். எங்களுக்கு இடைக்கால நிர்வாகம் கேக்கிறம் ஏனெண்டு சொன்னால் சர்வதேச அங்கீகாரம் வேணும் எங்களுக்கு. அதுக்காக அன்றி வேறெதுக்காகவும் இல்லை. இதைப் புரிந்து கொள்ளுங்கோ.

காலங்காலமாக இடம்பெயர்ந்து எமது மக்கள், வெளிநாடுகள்ள வசிக்கிற மக்கள் எங்களுக்குச் செய்த உதவிகள், இந்த உதவிகளால் நாங்கள் கட்டியெழுப்பிய இராணுவம், பெற்ற விடுதலை, இதுகளாலை நாங்கள் ஒரு அரசையே உருவாக்கியிருக்கிறம்.

நாங்கள் வெறும் கையோடை நிக்கேல்ல. சிங்களவன்தான் எங்களுக்குப் பயப்படவேணும். நாங்கள் உண்மையான சமாதான வழியில் நிற்கிறம். எமது மக்கள் போரால அவலப் பட்டிருக்கிறார்கள் பெரும் துன்பப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் எல்லாம் சோர்ந்துபோய் போராட்டத்தையோ, சுதந்திரத்தையோ கைவிடத் தயாராய் இல்லை. எங்கட போராட்டம் தொடர்ந்து நடக்கும்.

தலைவர் இன்னொரு முக்கியமான விசயம் சொல்லுறார். இதுதான் சிங்களவருக்குக் கொடுத்த முக்கியமான அடி. அவர் எல்லாருக்கும்தான் - இலங்கை அரசியல் இயக்கங்கள் எல்லாவற்றுக்கும் தான் சொல்லுகிறார்.

எஸ்.எல்.எவ்.பியும் சரி, யு.என்.பியும் சரி. ஜே.வி.பியும் சரி, சிஹல உறுமயவோ, இடது சாரிகளோ ஒருவருக்கும் தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வு வழங்குவதெண்ட உருப்படியான திட்டமும் இல்லை.

தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு வழங்குவது என்ற உருப்படியான திட்டம் இதுவரையும் இல்லை. நாங்களாவது எழுத்தில குடுத்திருக்கிறம்.

ஆனால், இவங்களிட்டை அப்படியானதொரு திட்டமே இல்லை. அப்ப என்னெண்டு பேசுறது எணடு கேட்கிறார். தமிழருக்கு அடிப்படைகள் என்று இருக்கு. அதாவது திம்பு பேச்சுவார்த்தையில் அந்த அடிப்படைகள் என்னெண்டு நாங்கள் சொன்னம்.



வட - கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு தாயகம் இருக்குது. வடக்கில் தமிழ் பேசும் மக்களையும் - நாங்கள் இஸ்லாமிய மக்களையும் எங்களோட அரவணைச்சுக்கொண்டுதான் சொல்லுறம்.

வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம். அடுத்தது தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மைக் குழு இல்லை. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். தமிழ் மக்களுக்கெண்டு ஒரு மொழி இருக்கு, ஒரு மேன்மை மிக்கதொரு வரலாற்றுத் தாயகம் இருக்கு. நீண்டகால வரலாறு இருக்கு. ஒரு பொருளாதார வாழ்விருக்கு. ஒரு மக்கள் இனம் கட்டமைப்பு என்ற உணர்வு இருக்கு.

இப்படிப்பட்ட பெரியதொரு மக்கள் கட்டமைப்பாக ஒரு தேசியமாக நாங்கள் இருக்கிறம். சிறுபான்மை என்று எங்களை ஒதுக்காதே. அடுத்ததாக எங்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கு.

சுயநிர்ணய உரிமையெண்டால்- எங்கட அரசியல் தலைவிதியை, எங்கட கலை, கலாசார, பொருளாதாரத் தலைவிதியை நாங்களே நிர்ணயிக்கும் உரிமை.

ஐ.நாவால் அங்கீகரிக்கப்பட்ட உரிமை. அதாவது ஒரு மக்கள் சமூகத்துக்கு அந்த உரிமை இருக்கு. தனியரசை அமைக்கும் உரிமை. நாங்கள் வேணுமெண்டால் எங்கட மக்கள் கூட்டாக சிங்களவரோடையும் வாழலாம். ஆனால் பிரிந்து சென்று தனியரசையும் அமைக்கலாம்.

ஆகவே தமிழருக்கு மூன்று அடிப்படை. தமிழர் தேசியம், தமிழர் தாயகம், தமிழர் தன்னாட்சி உரிமை. அதாவது சுயநிர்ணய உரிமை. இது மூன்றையும் யாராவது அங்கீகரிக்கிறார்களா என்று கேட்கிறார் தலைவர்.

ஒரு சிங்கள இயக்கமும், ஒரு சிங்களக் கட்சியும் இதுவரை இந்த மூன்று கோட்பாடுகளில் ஒனறையாவது அங்கீகரித்ததாக இல்லை. அதுதான் தலைவர் கேடகிறார்.

இனப் பிரச்சினையைப் பற்றி- நிரந்தரத் தீர்வைப் பற்றிப் பேசுவதென்று சொன்னால், ஒவ்வொரு கட்சியிடமும் கேட்கிறார் நீங்கள் உங்களுடைய கொள்கையை - கொள்கை நிலைப்பாட்டை அதிகாரபூர்வமாக வெளியிடுங்கோ.

அதில நீங்கள் ஒருமித்த கொளகையை - நியாயமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தால், எங்கட அடிப்படைகளை நீங்கள் அங்கீகரித்தால், நாங்கள் பேசத் தயார் என்று அவயளுக்கே திருப்பி ஒரு கேள்வியைப் போடுகிறார்.

முக்கியமான விசயம் தலைவர் அறிக்கையில் அது வருது.

வடக்கு - கிழக்கில் வாழும் இஸ்லாமியர் உள்ளிட்ட தமிழ் மக்களை உள்ளடங்கிய தமிழர் வரலாற்றுத் தாயகம், தமிழர்கள் தேசிய இனம், தனித்த மொழி, ஒருங்கிணைந்த பொருளியல் வாழ்வு, மக்கள் இனக்கட்டமைப்பு என்ற உணர்வு இருக்கிறது.

ஒரு தேசிய இனமாக திகழ்ந்து வரும் தமிழர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துள்ள சுய நிர்ணய உரிமை உள்ளது.

அதாவது எங்களது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கிற உரிமை அது.

அதாவது பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமை எங்களுக்குண்டு.

இதை சிங்களவர்கள் அங்கீகரிக்கிறார்களா என்கிறார் தலைவர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் உங்களது நிலையை வெளிப்படுத்துங்கள் என்கிறார் தலைவர். இதைத்தான் தலைவர் தனது உரையில் விளக்கியுள்ளார். அடுத்து சந்திரிகாவுக்கு அவசர அழைப்பு விடுகிறார்.

அதாவது நாங்கள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை நிபந்தனையற்ற அடிப்படையில் ஏற்று பேச்சுக்கு வரவேண்டும்.

ஆனால், அதைவிடுத்து - நிராகரித்து, காலத்தை தட்டிக் கழித்து ஏமாற்ற நினைத்திருந்தீர்கள் என்றால் நாங்கள் எமது போராட்டத்தைத் தொடங்குவோம்.

பிரபாகரன் போருக்குத் தயாராகிவிட்டார்.

போரா? சமாதானமா? என்பதை சந்திரிகாதான் தீர்மானிக்க வேண்டும்.

தலைவர் கேட்டதைப் போல் ஒன்று நீங்கள் பேச வேண்டும், இல்லையேல் நாங்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை எனத் தெரிவித்தார்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், பிரதியுஷா நடித்த
சவுண்ட் பார்ட்டி (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
RAMBO - 3
(சி-2723)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
2வது வெற்றிவாரம்
தனுஷ், பிரியா நடித்த
ட்ரீம்ஸ் (ரீலஸ்)
வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக
RAMBO - 3
கா.நே. 10.30 2.30 6.30 9.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேநாள் வெளியீடான
அஜித் இரு வேடங்களில்
பூஜா நடித்த
அட்டகாசம் (ரீலஸ்)
பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான

R.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல்
நடித்த
சத்ரபதி
கா.நே. 11.00, 2.00, 7.00, 10.00

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இடைக்கால நிர்வாகத்தின் படி பேச்சுக்களை நடத்த முடியாது!

## மீண்டும் வலியுறுத்துகிறது ஜே.வி.பி

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிராக ஜே.வி.பி ஒருபோதும் இருக்கவில்லை எனவும் தற்போதைய பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படுமாயின் அது வரவேற்கத்தக்கதொன்றென்பதே ஜே.வி.பி யின் நிலைப்பாடு எனவும், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

தமிழ் ஊடகங்களோ, அல்லது தமிழ் அரசியல்வாதிகளோ கூறுவதுபோல் - ஜே.வி.பி. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரானதாக இல்லை. ஆனால், புலிகள் தமது இடைக்கால நிர்வாகசபை யோசனையின்படி பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென கூறுகின்றார்கள். ஆனால், இவ்வாறு செய்யமுடியாது என நாம் கூறுகின்றோம். ஏனெனில் இது தேசியப் பிரச்சினை இலங்கை நாட்டில் வாழும் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பிரச்சினை இதுவாகும்.

எனவே, இந்த அடிப்படையில் புலிகள் முன்வைத்துள்ள யோசனையானது, நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும் என்பதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளது. இவ்வாறு நாடு பிளவுபடுமாக இருந்தால் அதனால் இந்த நாட்டு மக்களே பாதிக்கப்படப்போகிறார்கள். எனவே, இந்தத் தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனநாயக முறைப்படி பேச்சுக்கள் நடத்தப்படும் என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடு ஆகும்.

இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில்தான் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் எனக்கோரி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்தது என்பது இரண்டாம் கட்டப்பிரச்சினையாகும். அதனை நாம் அலசி ஆராய வேண்டிய பிரச்சினை.

நோர்வே மீண்டும தமது கடமையைச் செய்யாமல் பக்கச் சார்பாக நடந்து வருகிறது. எனவே நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கு எதிராகத்தான் திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் செய்தோம். வேறு எதற்காகவும் இல்லை.

நாம் சென்றது நோர்வேக்கு எதிராகத்தான். ஆனாலும், அங்கு சிங்கள வர்த்தகர்களின் சங்கம் ஒன்று உள்ளது. அந்தச் சங்கத்தினால் ஏட்டிக்குப்போட்டியாக பதாதைகள் எரித்தமை, சிங்கக்கொடி ஏற்றியமை போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன. இந்தச் சம்பவத்தை ஜே.வி.பி மீது சுமத்தினால் அது மிகப் பெரிய தவறு எனத் தெரிவித்தார்.

## தலைவர் பிரபாவை வாழ்த்தி திருச்சியில் சுவரொட்டிகள்!



(புதுடெல்கி)

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு 50 ஆவது பிறந்ததின வாழ்த்துத் தெரிவித்து தமிழகம் திருச்சி நகரில் பரவலாகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

தலைவர் பிரபாகரனின் அழகிய வர்ணப் படங்களுடன் கையெழுத்தில் வாழ்த்து எழுதப்பட்டு ஒட்டப்பட்ட இந்தச் சுவரொட்டிகளை பொலிஸார் உடனடியாக அகற்றி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருச்சியில் மாவட்ட செயலர் அலுவலகம் மற்றும் சனநடமாட்டம் மிக்க இடங்களில் ஒட்டப்பட்ட இந்தச் சுவரொட்டிகள் திருச்சி பொலிஸாருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின.

திடீரென ஒட்டப்பட்ட இந்தச் சுவரொட்டிகள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன? ஒட்டியவர்கள் யார் என்பன தொடர்பாக விசாரணைகளை கியூ பிரிவு பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# திருமலை மாவட்டத்தில் இன்று பூரண ஹர்த்தால்!

## தமிழ்மக்கள் பேரவை அழைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இன்று பூரண ஹர்த்தால் நடத்துவதற்கு திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழீழத்தின் தலைநகரான திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையில் படையினர் மீண்டும் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்மக்களின் புனித தினமான மாவீரர் நாளில் திருகோணம்லை நகரில் தமிழ் மக்களுக்கு எதிராகப் படையினர் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தனர்.

மாவீரர் நாளன்று வன்முறையில் இறங்கிய ஜே.வி.பி. கும்பலுக்கு படையினர் பக்க பலமாகச் செயற்பட்டனர். வன்முறைக்கும்பல் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தபோது அதை அந்த இடத்திலேயே தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

ஆனால் வன்முறைக் கும்பல்களை மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெறுகின்ற இடம்வரை வர விட்டுவிட்டு பின்னர் தடுப்பது போன்று படையினர் நாடகமாடியுள்ளனர்.

திருக்கடலூர், சிவன்கோவிலடி, சிறிமாபுரம் போன்ற இடங்களில் படையினர் வன்முறைகளில் ஈடுபட்டு மாவீரர்களின் படங்களை எரித்ததுடன் பொதுமக்களையும் தாக்கினர்.

இவை முன்னர் படையினரால் திருகோணமலை மாவட்டத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளை ஞாபகமூட்டுகின்றன.

எனவே - தமிழீழ மக்களே எமது உணர்வுகளை அடக்கமுடியாது என அவர்களுக்கு தெரியப்படுத்துவோம். அரச படைகள் எமக்கு எதிராகச் செயற்பட்டால் வீதிகளில் இறங்கிப் போராடுவோம் என எச்சரிக்கை விடுக்கின்றோம்.

தமிழீழ தலைநகர் வாழ் தமிழ் மக்கள் மீது பேரினவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டால் சமாதானம் அற்றுப்போகும் என சொல்வோம். ஜே.வி.பி என்னும் வன்முறைக் கும்பலின் செயற்றிட்டங்களை அடியோடு அழிப்போம்.

உண்மையான சமாதானத்தை இலங்கை அரசாங்கம் கொண்டுவர விரும்பாவிட்டால், தலைநகராம் திருகோணமலை மக்கள் தேசியத் தலைவரின் வழியில் எமது மண்ணை மீட்டே தீருவோம். திருகோணமலையில் பாதுகாப்பு என்னும் போர்வையில் அதிரடிப் படையினர் உட்பட இராணுவத்தினர் நடமாடக்கூடாது.

இந்த நிலை தொடருமானால் திருகோணமலையை பூரண ஸ்தம்பித நிலைக்கு கொண்டுவருவோம்.

இந்த ஹர்த்தாலின் காரணமாக தனியார் கல்வி நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வியாபாரத் தாபனங்கள் என்பவற்றை முற்றாக மூடுமாறும அரச தனியார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் எதிலும் பொதுமக்கள் பயணம் செய்யவேண்டாம் எனவும் எந்தவிதமான வன்முறைக்கும் இடம்கொடாது சாத்வீக வழியில் இந்தக் ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (04,10)

## மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் இடமாற்றம்

யாழ்.மனித உரிமை ஆணைக் குழு அலுவலகம் இன்று முதல் இடமாற்றப்படவுள்ளது.

யாழ். 3 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள இரண்டுமாடிக் கட்டடம் ஒன்றில் இன்றுமுதல் மனித உரிமை ஆணைக்குழுவின் புதிய அலுவலகம் இயங்கவுள்ளது.

பொதுமக்கள் புதிய அலுவலகத்தில் வந்து தம்முடன் தொடர்பு கொள்ளமுடியும் என யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

# பொலனறுவ விகாரையில் வீழ்ந்த மர்மப் பொருள்!

## பரிசோதனைகள் ஆரம்பம்

(பொலனறுவ)

பொலனறுவ பிரதேசத்தில் பௌத்த விகாரை ஒன்றின் வளாகத்தில் நேற்று முன்தினம் ஆகாயத்திலிருந்து மர்மப் பொருள் ஒன்று வீழ்ந்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை பொலனறுவ சிறிசைத்திரிய வம்பாராம விகாரையின் வளாகத்தில் வீழ்ந்த இந்த மர்மப் பொருள் தொடர்பாக பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இது ஒரு இரும்பு வகையைச் சேர்ந்த விண்கல் என அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழக பௌத்த பீடத்தின் கலாநிதி ஜெயரத்ன கருத்துத் தெரிவிக்கையில்-

தற்சமயம் மொறட்டுவ- ஆதர் சி.கிளார்க் மையத்தில் குறிப்பிட்ட விண்கல் பரிசோதிக்கப்படுகிறது.

இந்த விண்கல் 3.68 மீற்றர் விட்டத்தைக்கொண்டது.

புவியீர்ப்பு சக்தியினால் இத்தகைய விண்கற்கள் பூமியை நோக்கி மணிக்கு 13 முதல் 28 கிலோ மீற்றர் வேகத்தில் வருவதனால், பிரகாசமான ஒளியுடன் வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (01)

## பாதுகாப்பு...

உறுதியளித்தார்.

இந்தப் பேச்சுக்களின்போது ஜனாதிபதி சந்திரிகாவுடன் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் பாதுகாப்புச் செயலர் சிறில் ஹேரத், ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கைக்குண்டு கண்டுபிடிப்பு!

ஹற்றன் நகர பஸ் நிலையத்தில் அனாதரவாகக் காணப்பட்ட பொதி ஒன்றில் ஜே.ஆர். ரகக் கைக்குண்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றுப்பகல் கண்டுபிடிக்கப்பட்ட கைக்குண்டை செயலிழக்க வைப்பதற்காக நுவரெலியா இராணுவ குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அஸ்கிரிய பீடாதிபதி...

திரும்ப நேரிடும் என விடுத்திருக்கும் எச்சரிக்கையால் எழுந்திருக்கும் புதிய அரசியற் சூழல் என்பன குறித்து விரிவாக கலந்தாலோசனை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது - சமாதான முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு வழங்குவது தொடர்பாகப் பேசப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவைக் கோருவதாக பகிரங்கமாக நடித்துக்கொண்டு அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவி கொடுத்து தன்வசம் இழுக்க முற்படுகின்றது.

நாட்டின் சமாதானத்திற்கா அல்லது பொருளாதாரத்திற்கா அல்லது பதவிநீடிப்பிற்கா அவர் முக்கியத்துவம் கொடுகின்றார் என்பது குறித்து அறியமுடியாதவாறு தற்போது சிக்கல்கள் தோன்றியுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஒத்துழைப்பு சமாதான முன்னெடுப்பிற்கு தேவையென ஜனாதிபதி கோரினார். எமது கட்சித்தலைவர் அந்த ஒத்துழைப்பை தெரிவித்திருந்தார்.

அப்படியிருந்தும் சமாதான முன்னெடுப்புக்கள் பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளாமல் அரசியல் நாகரீகம் அற்ற முறையில் தனது பதவியை நீடிப்பதற்காக ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்களை தன்வசமெடுக்க முற்படுகின்றார். இதன்மூலம் அரசியல் யாப்பைத் திருத்தி சட்டவிரோதமாக பதவிக்காலத்தை நீடிக்க முற்படுகிறார் என்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில்...

தொடர்ந்து எழுச்சி நடனங்கள், விடுதலை கீதங்கள், கவிதாஞ்சலிகள் மற்றும் எழுச்சியுரைகள் ஆகியவை அரங்கு நிறைந்த மக்களுடன் மிகவும் உணர்வு பூர்வமாக இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் சிறப்புப் பேச்சாளர்களாக விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் உருத்திரகுமார், உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி ஜெயலிங்கம், உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப் பொறுப்பாளர் க.கருணாகரன் மற்றும் ஒஹாயோ மாநிலத்திலிருந்து வருகை தந்தவரும், போராளிகளால் 'உஷன் அம்மா' என்றழைக்கப்படுபவருமான சின்னத்தங்கம் சரவணமுத்து ஆகியோர் எழுச்சியுரை ஆற்றினர்.

இதேவேளை, அமெரிக்காவில் எதிர்வரும் டிசம்பர் 4 ஆம் திகதி லொஸ்ஏஞ்சல்ஸ், நியுயோர்சி, புளோரிடா, சிக்காக்கோ, சியாற்றில், சான் பிரான்ஸிஸ்கோ ஆகிய இடங்களிலும், டிசெம்பர் 5 ஆம் திகதி ஒஹாயோ மாநிலத்திலும் மாவீரர் தினம் அனுஷ்டிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தென்னிலங்கை...

தெரிகின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இந்த எச்சரிக்கையைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளமுடியாது என்றும் இதற்கு அரச தரப்பில் இருந்து உரிய பதில கொடுக்கப்படுவதுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள் குறித்து உடனடியாக ஆராயவேண்டும் என்றும் இந்த இரகசிய கலந்துரையாடல்களில் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தென்னிலங்கை அரசியல் சக்திகள் அனைத்தும் தமது கருத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று விடுக்கப்பட்டிருக்கும் அவசர அழைப்புக் குறித்தும் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த விடயங்களை உள்ளடக்கியதாக - ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாடுகளை விளக்கி அரசாங்கம் முக்கியமான அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளது.

அத்துடன் ஜே.வி.பியும் தனியானதொரு அறிக்கையை இன்று வெளியிடும் என்றும் ஜே.வி.பி முக்கியஸ்தர் ஒருவர் நேற்றிரவு நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

ஐ.தே.கவும் மாவீரர் தின உரை தொடர்பாக உயர்மட்டக் கலந்துரையாடல்களை நிகழ்த்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பி

செல்வி வெண்மதி சண்முகலிங்கம் அவர்களின்

பாசமிகு தாயார்

திருமதி சண்முகலிங்கம் சரோஜினிதேவி

அவர்களின் மறைவால் மனவேதனை அடைகிறோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் கும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பட்டதாரி பயிலுனர்கள்,
அரியாலை சனசமூக நிலையம், அரியாலை.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.